உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 12 வள்ளுவர் ஆண்டு 2028 புரட்டாதி 31 வெள்ளிக்கிழமை (17-10-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 305

# குண்டுத் தாக்குதலின் பின் தப்பிய ஐவரைத் தேடி கொழும்பில் வேட்டை!

## மேலும் பல புதிய தாக்குதல்களை அவர்கள் நடத்தலாம் என அச்சம்

கொழும்பு, ஒக்ரோபர் 17

கொழும்பு கோட்டைப் பகுதியில் நேற்று முன்தினம் பெரும் குண்டு வெடிப்புத் தாக்குதலை நடத்திய குழுவினரில் ஐவர் தாக்குதல் சம்பவத்தின் பின்னர் தப்பிச் சென்றுவிட்டதாகக் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தப்பிச் சென்றுள்ள ஐவரும் கொழும்பிலும் சுற்றுப்புறங்களிலும் வேறு புதிய தாக்குதல்களை நடத்தலாம் என்று கருதப்படுவதால் தலைநகரிலும் சுற்றுப் புறங்களிலும் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டிருக்கின்றன.

புதன்கிழமை இடம்பெற்ற தாக்குதலில் 10 பேர் இரு குழுக்களாக ஈடுபட்டிருந்தனர் என்றும் — இவர்களில் ஐவர் உயிரிழந்து விட்டதாகவும் — தெரிவிக்கப்பட்டது.

இந்த ஐவரில் இருவரின் சடலங்கள் [illegible] காணப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

இவர்களில் ஒருவர் ராஜா என அழைக்கப்படும் பேபி [illegible] என்ற கடற்புலி உறுப்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## 100 தமிழர்கள் கொழும்பில் கைது

கொழும்பு, ஒக். 17

கொழும்பு கோட்டைப் பகுதியில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தையடுத்து பொலிஸாரும் — இராணுவத்தினரும் சுற்று வட்டாரங்களில் மேற்கொண்ட தேடுதல்களின் போது 100 தமிழர்கள் வரை சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் நேற்று பிற்பகல் வரை லொட்ஜ்கள், விடுதிகள் போன்றவற்றில் தங்கியிருந்தோரும் — வீதிகளில் நடமாடியோரும் சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டனர்.

இவர்களில் 15 பெண்களும் அடங்குவர் எனத் தெரிவிக்கப்பட்டது.

கைதானோர் பொலிஸ் நிலையங்களிலும், இரகசியப் பொலிஸ் பிரிவுகளிலும் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வருவதாகக் கூறப்பட்டது (உ-21-3)

## கல்முனை லொறியில் குண்டு வந்தது!

கொழும்பு, ஒக். 17

கல்முனை மருதமுனையில் இருந்து அரிசி ஏற்றி வந்த லொறியைப்பயன்படுத்தியே கொழும்பில் நேற்று முன்தினம் வெடிகுண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது.

விசாரணைகளின் போது இது தெரிய வந்ததாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

'ரெஜிபோம்' பெட்டிகளில் ஆயுதங்கள் வைக்கப்பட்டு அதன் மேல் பூக்கள் போடப்பட்டு மூடப்பட்டு அவை கொழும்புக்குக் கொண்டுவரப்பட்டதாக கைது செய்யப்பட்டுள்ள பெண்களான இரு விடுதலைப்புலிகள் சந்தேக நபர்கள் தெரிவித்தனர் என்றும் பொலிஸ் வட்டாரங்கள் கூறின. (உ-21-3)

## சி.ஐ.டி. பொலிஸின் ஏ.எஸ்.பியும் பலி!

கொழும்பு, ஒக். 17

கொழும்பில் புதனன்று நடந்த குண்டுவெடிப்பில் சிக்கிய இரகஸியப் பொலிஸ் பிரிவின் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் நிஸங்க தர்மரத்தினவும் உயிரிழந்ததாக நேற்று தெரியவந்தது.

இவர் உடற்பயிற்சி செய்வதற்காக தினமும் காலிமுகத் திடலுக்கு செல்வது வழமை என்றும்—

சம்பவ தினமும் அவர் வழமைபோல் பயிற்சி எடுக்க காலிமுகத்திடலுக்குச் சென்றார் என்றும்—

மாலை வரை அவர் திரும்பாததால் குண்டுவெடிப்புச் சம்பவம் இடம்பெற்ற பிரதேசத்தில் தேடுதல் மேற்கொள்ளப்பட்டது என்றும்—

நேற்று சடலமாக அவர் மீட்கப்பட்டார் என்றும்— தெரிவிக்கப்பட்டது. (உ-21-3)

## குண்டுத் தாக்குதலால் பட்ஜெட்டும் பாதிப்பு!

கொழும்பு, ஒக். 17

கொழும்பில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தைத் தொடர்ந்து அடுத்தாண்டு வரவு - செலவுத் திட்டத்தில் மாற்றங்கள் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எதிர்வரும் 5 ஆம் திகதி வரவு— செலவுத்திட்டத்தை சமர்பிக்க சகல பணிகளும் பூர்த்தியாகியிருந்தன. ஆனால் தற்போதைய குண்டு வெடிப்பால் வரவு—செலவுத்திட்டத்தில் சிறு தாக்கம் ஏற்பட்டுள்ளது. அதற்கேற்ப வரவு—செலவுத் திட்டத்தை மாற்றவேண்டியுள்ளது—இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார். (உ-21-3)

## அமெரிக்க அதிகாரிகளை இலக்குவைத்த தாக்குதலாம்

கொழும்பு, ஒக். 17

இலங்கை இராணுவத்தினருக்கு பயிற்சி அளித்து வரும் அமெரிக்க ''கிறீன் பரட்'' கொமண்டோபடைப் பயிற்சியாளர்கள் தங்கியிருந்த கலதாரி ஹோட்டலை இலக்கு வைத்தே குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக செய்தி ஏஜென்ஸிகள் தெரிவித்தன.

அமெரிக்க பயிற்சியாளர் இலங்கை படைகளுக்கு பயிற்சி அளிப்பதற்கு பதிலடியாக இத்தாக்குதல்நடத்தப்பட்டிருக்கலாம் என்றும்— அந்த செய்தி ஏஜென்ஸிகள் ஊகம் தெரிவித்தன.

மத்திய கிழக்கு நாட்டைச் சேர்ந்தவருக்கு இந்த ஹோட்டல் சொந்தமாக இருந்த போதும், அமெரிக்க நிறுவனம் ஒன்றே அதை நிர்வகித்து வந்தமையும் தாக்குதலுக்கு மற்றொரு காரணமாகக் கூறப்படுகின்றது.

இந்தக் ஹோட்டலில் அமெரிக்க பயிற்சியாளர்கள் 15 பேர் கடந்த சில நாள்களாக தங்கியிருந்தனர் என்றும்—

சுழற்சி முறையில் அவர்கள் தங்குமிடங்களை மாற்றுவதால் சம்பவம் நடந்த சமயம் ஹோட்டலில் அவர்கள் இருக்கவில்லை என்றும்— மேலும் தெரிவிக்கப்படுகிறது.

அதேநேரம் — தமது அமைப்பை அமெரிக்கா தடை செய்ததற்குப் பதிலடியாக விடுதலைப் புலிகள் இத் தாக்குதலை நடத்தினர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதற்கிடையில் —

அமெரிக்க படையினர் இலங்கைப் படைகளுக்கு பயிற்சி அளிப்பது குறித்து கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரக பாதுகாப்பு அதிகாரி லெப்டினன்ட் கேணல் ஹரி மைக்கல் புகல் தனியார் வானொலி ஒன்றுக்கு கருத்து தெரிவித்தார்

'' இலங்கைப் படையினருக்கு சமநிலைத் தாக்குதல் பயிற்சியை அமெரிக்க 'கிறீன் பரட்' கொமாண்டோ படைப் பயிற்சியாளர்கள் வீரவில காட்டில் வைத்து வழங்கி வருகிறார்கள்.

'' எதிர்வரும் டிசம்பர் மாதத்துக்குள் மூன்று குழுக்கள் இங்குவந்து பயிற்சி அளிக்கும். ஒவ்வொரு குழுக்களுக்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ. நா. செயலர் கண்டனம்

கொழும்பு, ஒக். 17

கொழும்பில் புதனன்று இடம்பெற்ற குண்டு வெடிப்பு சம்பவத்தை ஐ. நா. செயலாளர் நாயகம் கோபி அனான் கண்டித்துள்ளார்.

இத்தாக்குதலால் ஏற்பட்ட உயிர்ச்சேதங்களுக்கு அவர் தமது கவலையையும் வெளியிட்டார். (உ-3-5)

## மேலும் இரு குண்டுகள் நேற்று வெடித்தன!

கொழும்பு, ஒக். 17

கொழும்பு கோட்டை குண்டு வெடிப்பையடுத்து அப்பகுதியில் தேடுதல் நடத்திய படையினர் நேற்று இரு குண்டுகளைக் கைப்பற்றினர். நேற்றுக் காலை காலிமுகத் திடலில் வைத்து அவை செயலிழக்கச் செய்யப்பட்டன.

பாரிய சத்தத்துடன் அவை வெடித்ததால் நகரில் பரபரப்பு ஏற்பட்டது.

லேக்கவுஸ் நிறுவன மலசலகூடம் ஒன்றில் இருந்து ஒரு குண்டும் —

அருகில் உள்ள விகாரைப் பகுதியில் இருந்து மற்றொரு குண்டும் —

படையினரால் கைப்பற்றப்பட்டிருந்தன. (உ-21-3)

## குண்டுவெடித்த இடத்தில் ஒலிப்பதிவு நாடா மீட்பு

கொழும்பு ,ஒக். 17

கொழும்பில் நேற்று முன்தினம் குண்டுவெடித்த பகுதியில் இருந்து தாக்குதல் தொடர்பான எச்சரிகையை வெளிப்படுத்தும் ஒலிப் பதிவு நாடா ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளதாக பி. பி. ஸி. தெரிவித்தது.

''பொதுமக்களுக்கு ஊறு விளைவிக்கும் நோக்கத்துடன் இத் தாக்குதல் நடத்தப்படவில்லை. கட்டடங்களை சேதப்படுத்துவதே நோக்கமாகும். வெளிநாட்டு முதலீடும் லாபம்தரும் சுற்றுலாத்தொழிலும் அடங்கிய நாட்டுப் பொருளாதாரமே இத்தாக்குதலினால் முக்கியமாக பாதிக்கப்பட உள்ளது என்று அந்த நாடாவில் தெரிவிக்கப்பட்டிருந்ததாகவும் கூறப்பட்டது. (உ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடாளுமன்றை பகிஷ்கரிக்குமாறு பாதுகாவலர் சங்கம் கோரிக்கை

## டக்ளஸ் தேவானந்தாவிடம் நேரில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.17
குடாநாட்டில் கைதாகி தகவலற்றிருப்போர் விடயத்தில் அரசின் கவனத்தை ஈர்ப்பதற்காக எதிர்வரும் நாடாளுமன்றக் கூட்டத் தொடரை பகிஷ்கரிக்குமாறு ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருக்கிறது.

கைதாகித் தகவலற்றிருப்போர் பாதுகாவலர் சங்க பிரதிநிதிகளும், அன்னையர் முன்னணிப் பிரதிநிதிகளும் இணைந்து ஈ.பி.டி.பி. அமைப்பின் செயலாளர் நாயகமும் நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தாவை நேற்று நேரில் சந்தித்து இவ் வேண்டுகோளை விடுத்தனர்.

கைதாகித் தகவலற்றிருப்போரின் குடும்பங்களின் நிலைவரத்தை கேட்டறிந்த டக்ளஸ் தேவானந்தா தாம் கொழும்பு சென்றதும் இது விடயமாக முயற்சி எடுத்து மூன்று வாரங்களுக்குள் பதில் அனுப்புவதாக அவர்களிடம் தெரிவித்தார்.

அண்மையில் யாழ். வருகை தந்த மனித உரிமை ஆணைக்குழுவினரிடம் சமர்ப்பித்த மகஜரின் பிரதி ஒன்றை பாதுகாவலர் சங்கப் பிரதிநிதிகள் திரு. தேவானந்தாவிடம் கையளித்தனர். (ஐ)

# கடவுச்சீட்டு வழங்க நடமாடும் சேவை

## ஒரு தொகுதி படிவங்கள் வந்தன

யாழ்ப்பாணம், ஒக். 17
யாழ்ப்பாணத்தில் நடமாடும் சேவை மூலம் கடவுச்சீட்டு வழங்கும் திட்டத்தின் முன்னோடியாக ஆயிரம் கடவுச்சீட்டு விண்ணப்பப்படிவங்கள் நேற்று யாழ். செயலகத்துக்கு எடுத்து வரப்பட்டன என்று யாழ். அரச அதிபர் க. சண்முகநாதன் தெரிவித்தார்.

இந்தப் படிவங்கள் பிரதேச செயலகர்கள் மூலம் கடவுச்சீட்டுப் பெற விரும்புவோர்களுக்கு வழங்கப்பட்டு, பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் பிரதேச செயலர்களால் கையேற்கப்படும் என்றும்—

அடுத்த மாத நடுப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் குடியகல்வு, குடிவரவு அதிகாரிகளால் நடத்தப்படும் சேவையில் வைத்து அவை பரீசீலிக்கப்படும் என்றும்—

பின்னர் அவை கொழும்புக்கு எடுத்துச் செல்லப்பட்டு ஒரு வார காலத்துக்குள் கடவுச்சீட்டு உரியவர்களுக்கு கிடைக்க ஏற்பாடு செய்யப்படும் என்றும்—

அவர் மேலும் தெரிவித்தார்.

மேலும் 4 ஆயிரம் படிவங்கள் அடுத்த சில தினங்களில் இங்கு வந்து சேரும் என்றும் அவர் தெரிவித்தார். (உ-3)

# வெளிநாட்டமைச்சின் அதிகாரிகள் குழு வருகை

யாழ்ப்பாணம், ஒக். 17
குடாநாட்டில்இடம்பெறும் மனித உரிமை மீறல் சம்பவங்கள் மற்றும் குடநாட்டின்நிலைமை குறித்துஆராய வெளிநாட்டமைச்சு அதிகாரி குழு ஒன்று நேற்று யாழ்ப்பாணம் வந்துள்ளது.

வெளிவிவகார அமைச்சின் மேலதிகச் செயலாளர் றொட்றிக்கோ தலைமையில் ஐவர் கொண்ட குழு யாழ். செயலகத்துக்கு நேற்று விஜயம் செய்தது. அரச அதிபர் உட்பட அதிகாரிகளுடன் இக் குழு கலந்துரையாடியது.

யாழ்ப்பாணத்தில் தேசிய மனித உரிமைகள் ஆணைக் குழு அலுவலகம் திறத்தல், யாழ். நூலக புனரமைப்பு உட்பட பல விடயங்கள் குறித்து இக்குழு யாழ்ப்பாணத்தில் ஆராயும்.

யாழ். நூலகம், கோட்டை, நகரப்பகுதி ஆகியவற்றுக்கும் இக்குழுவினர் சென்று நிலைமைகளை நேரில் அவதானித்தனர்.

இக்குழு இன்று யாழ். பல்கலைக்கழகத்துக்கு விஜயம் செய்யவிருக்கிறது. (உ-3)

# மண்டலாபிஷேக பூர்த்தித் திருவிழா

யாழ்ப்பாணம், ஒக். 17
தெல்லிப்பளை ஸ்ரீதுர்க்கா தேவி ஆலய மண்டலாபிஷேகப் பூர்த்தித் திருவிழா எதிர்வரும் செவ்வாய்க்கிழமை 21 ஆம் திகதி நடைபெறவுள்ளது

அன்றைய தினம் அதிகாலை 5.30 மணிக்கு கிரியைகள் ஆரம்பமாகி மு.ப 10 மணிக்கு கலச சங்காபிஷேகம் நடைபெறும். அதனைத் தொடர்ந்து விசேட பூசையும், மகாகும்பாபிஷேக மலர் வெளியீடும் இடம்பெறும். அம்பாள் வெளிவீதியுலா வருவதனைத் தொடர்ந்து அன்னதானம் வழங்கப்படும்.

கலச சங்காபிஷேகத்தை ஒட்டிய ஆரம்ப கிரியைகள் முதல் நாள் திங்கட்கிழமை பி.ப.2 மணிக்குத் தொடங்கி மாலை 5 மணிக்கு முடிவடையும்.

கடந்த செப்ரெம்பர் 7 ஆம் திகதி ஸ்ரீ துர்க்காதேவி ஆலயத்தில் நடைபெற்ற மகாகும்பாபிஷேகத்தை தொடர்ந்து மண்டலாபிஷேகம் நடைபெற்று வருகிறது. (அ)

# சமய சந்நிதியில்

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினர் தொண்டமானாறு அருள்மிகு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலய சுற்றாடலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடத்தி வரும் வாராந்த நிகழ்வுகளில் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10-30 மணிக்கு ''தோன்றாத்துணை'', என்ற தலைப்பில் ஞான பண்டித இயலரசு க. முத்துவேலு சொற்பொழிவாற்றுவார். இந் நிகழ்வுக்கான அறிமுக உரையை சி. சிவலோகம் ஆசிரியர் நிகழ்த்துவார்.

(ஐ-30-173)

★ ★ ★

அருள்மிகு ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில் ஆஞ்சனேயர் உற்சவம் பொங்கல், மடை என்பன இன்று வெள்ளிக்கிழமை நடைபெறும்.

(ஐ-30)

# குரும்பசிட்டியில் முதியோர் தின விழா

யாழ்ப்பாணம், ஒக். 17
குரும்பசிட்டி நலிவுற்றோர் நலனோம்பு நிலையத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டமும் முதியோர் தின விழாவும் எதிர்வரும் 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெற உள்ளது.

வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற உள்ள விழாவுக்குநலனோம்பு நிலையத்தலைவர் வி. கிருஷ்ணசாமி தலைமை வகிப்பார். யாழ். பல்கலைக்கழக மெய்யியற்றுறை தலைவர் நா.ஞானகுமார், மகளிர் அபிவிருத்தி நிலைய இயங்குநர் திருமதி சறோஜாசிவச்சந்திரன், சமூக அபிவிருத்தி மன்றத் தலைவி திருமதி நவநீதம் ஜெகதீசன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொள்ள உள்ளனர். (ஐ-9)


உ
சிவமயம்

## அகில இலங்கை சைவக்குருமார் அர்ச்சகர் சபை

## சைவசமய அறிவுப் போட்டி

அகில இலங்கைச் சைவக் குருமார் அர்ச்சகர் சபையின் வெள்ளி விழாவை முன்னிட்டு நடைபெற இருக்கும் சமய அறிவுப் போட்டிக்கான வினாக்கள் **19 — 10 — 1997** ஞாயிற்றுக்கிழமை உதயன் பத்திரிகையில் வெளியாகும். இப்பரீட்சையில் மாணவர்கள் சைவ அபிமானிகள் பங்குபற்றி தங்கப்பதக்கம் உட்பட பெறுமதி மிக்க பரிசில்களை வெல்லுங்கள்.

செயலாளர்
அ. இ. சைவக்குருமார் அர்ச்சகர் சபை.

தலைமைச் செயலகம்:
நாயன்மார்கட்டு,
நல்லூர்.

(சி/1798)



ஓம்

## தெல்லிமாநகர் - கருணைமிகு காசிவிநாயகர் தேவஸ்தானப் பாலஸ்தாபன கும்பாபிஷேகம்

காசிப்பதியினின்றும் எழுந்தருளி வந்து தெல்லி மாநகர் - வீணாக்கடவைப்பதியிலே வீற்றிருந்து அடியார்களுக்கு நல்லருள் பாலித்துவரும் காசிவிநாயகப் பெருமானுக்குப் பல ஆண்டுகள் கும்பாபிஷேகம் இடம்பெறவில்லை. இதனை முன்னிட்டுப் புனரமைப்புச் செய்து கும்பாபிஷேகம் செய்வதற்குத் திருவருள் கூட்டியுள்ளது. எனவே புனரமைப்புச் செய்யும் நோக்குடன் பாலஸ்தாபன கும்பாபிஷேகம் **20-10-97** திங்கள் 10-30 மணிக்கும் 11 மணிக்கும் இடையில் வரும் சுபவேளையில் நிகழவுள்ளது. **19-10-97** ஞாயிறு பூர்வாங்கக் கிரியைகள் நடைபெறும். அடியார்கள் பங்குகொண்டு தரிசிப்பதோடு திருப்பணி நிறைவுபெற ஆவன செய்வார்களாக,

தேவஸ்தான
பிரதம சிவாச்சாரியார்.

(சி-1796)



## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை
திருமதி இந்திராணி நவரத்தினராசா
அவர்களின் பாசமிகு தந்தையார்

### கந்தையா குலசேகரம்பிள்ளை [ J.P. ]

அவர்களின் மறைவையிட்டு அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சபையினர்.

கிளி. / முகமாலை றோ. க. த. க. பாடசாலை.

(சி/1799)



## A/L 99, 98
97 மீட்டல்
வினா விடை
பொருளியல்

வடமராட்சி புகழ்ஆசிரியர்
திரு. லோகசிங்கம்
ஆரம்பம்: **18—10—97**
பிற்பகல் 1-00 மணி
அனுமதிகளை
பெற்றுக்கொள்ளவும்.

College of Commerce
நாவலர்றோட்,
யாழ்ப்பாணம்.
(49821)



## J. T. C
கல்வி நிலையம்
பாங்ஷால் வீதி, குருநகர்,
யாழ்ப்பாணம்.

## A/L 99
நெகிழ்ச்சிக்
கோட்பாடு

ஆரம்பம்: 17-10-97
(இன்று)
ஆசிரியர்:
திரு. M. விக்கி
B.A. (Econ-Sp.)
(50602)


## மரண அறிவித்தல்கள்

### ஆறுமுகம் கதிரமலை (பத்தர்)

(உரிமையாளர்: கௌரி நகை பூங்கா,
212, கஸ்தூரியார் வீதி, யாழ்.)

தெல்லிப்பழையை பிறப்பிடமாக கொண்டவரும் கொக்குவிலை வசிப்பிடமாக கொண்ட ஆறுமுகம் கதிரமலை (பத்தர்) 13-10-97 இல் கொழும்பில் காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கொழும்பில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகின்றோம்.

தகவல்:
மோகனராஜ் (மோகன்)
(மகன்)

கொக்குவில்.

(50599)

### சின்னத்துரை சுப்பிரமணியம்

(பொலீஸ் மணியம்)

இருபாலை கோப்பாயைச் சேர்ந்த இளைப்பாறிய பொலீஸ் உத்தியோகத்தர் சின்னத்துரை சுப்பிரமணியம் 16-10-97 வியாழக்கிழமை காலை காலமாகிவிட்டார்.

அன்னார் சு.சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், திருமதி மனோன்மணி இளையதம்பி (ஜேர்மனி), யின் அன்புச் சகோதரரும், சு. பரமானந்தன் (ஜேர்மனி), சு. செல்வராணி, காலஞ்சென்ற சு. நித்தியானந்தன் மற்றும் விஜயராணி, சு. சிவானந்தன் (இத்தாலி), சு. கிருபானந்தன் (ஆசிரியர், நாவற்குழி மகாவித்தியாலயம்), சு. விவேகானந்தன் (ஆசிரியர், கந்தவேள் தமிழ்க் கலவன் பாடசாலை), சு. கருணாகரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், செ. சண்முகராஜா (யாழ்ப்பாணம்), திருமதி ப. செல்வராணி (ஜேர்மனி), திருமதி நி. இராஜேஸ்வரி (அத்தியடி), சி. மயூரவதனி (இத்தாலி), கி. தாரணி (பட்டு, நாவற்குழி), க. பூலோகறஞ்சிதம் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், ப. பிரவீணா, நி. கௌசல்யா, நி. திவ்வியா, சி. மேனகா, கி. விசாகன், கி. சியாமளன், க. சுஜீதன், க. நிதுஷன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17-10-97) வெள்ளிக்கிழமை 10-00 மணிக்கு நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்

…. எச். லேன்,
இருபாலை,
கோப்பாய்.

(50600)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளர்ச்சிப் படை வசம் பிரஸ்ஸவில் நகரம்!

## அதிபர் லிசூபா எங்கே?

பிரஸ்ஸவில், ஒக். 17

கொங்கோ — பிரஸ்ஸவிலின் தலைநகர் பிரஸ்ஸவிலை முன்னாள் இராணுவ அதிபர் டெனிஸ் சாசூ என்கியூசோவின் கிளர்ச்சிப்படைகள் தங்கள் பூரண கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்துவிட்டன.

ஜனாதிபதி பஸ்கால் லிசூபா தற்போது எங்கே இருக்கிறார் என்பது தெரியவில்லை என்று ஐ. நா. அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அதிபர் லிசூபாவின் அரச அதிகாரிகள் பலரும் தலைநகரில் இருந்து தப்பி வெளியேறி அயல் நாடான கொங்கோ ஜனநாயகக் குடியரசின் (முன்னாள் ஸயர்) தலைநகர் கின்ஸாசாவுக்கு சென்றுவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தனிப்பட்ட இராணுவம் ஒன்றை வைத்துள்ள முன்னாள் அதிபர் டெனிஸ் சாசூ என்கியூசோ ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட அனுமதிக்கப்படாததை அடுத்து கொங்கோ பிரஸ்ஸவிலில் சண்டை மூண்டது தெரிந்ததே.

இரு தரப்பினருக்கும் இடையேயான மோதலை முடிவுக்குக் கொண்டு வர பிரெஞ்சு அதிபர் முயற்சி எடுத்தார். அதன் பின்னர் அமுலுக்கு வந்த யுத்த நிறுத்தங்கள் தோல்வியில் முடிவடைந்தன.

தற்போதைய சண்டையில் கிளர்ச்சிப் படைகளுக்கு அங்கோலா நாட்டுப் படையினர் உதவுவதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

சுமார் ஆயிரம் அங்கோலியப் படையினர் டாங்கிகள் சகிதம் கொங்கோ — பிரஸ்ஸவிலுக்குள் நுழைந்திருப்பதாகச் சொல்லப்படுகிறது.

கொங்கோ — பிரஸ்ஸவிலின் உள்நாட்டுப் பிரச்சினையில் அங்கோலாவின் தலையீட்டை அமெரிக்கா கண்டித்துள்ளது. (ஐ)

**உலக அரங்கில்**

## தஜிகிஸ்தானில் 13 படையினர் பலி!

இராணுவச் சீருடை அணிந்த இனந் தெரியாத ஆயுதபாணி ஒருவர் தஜிகிஸ்தானில் ஜனாதிபதி காவற் படையினர் தலைமையகத்தின் மீது நடத்திய தாக்குதலில் 13 படையினர் உயிரிழந்தனர். (ஐ)

# "காஸினி" விண்கலம் சனிக்கு பயணம்

கேப்கனரவெல், ஒக். 17

அணு சக்தி மூலம் இயங்கும் ''காஸினி'' என்ற விண்கலத்தை அமெரிக்க விஞ்ஞானிகள் சனிக் கிரகத்துக்கு அனுப்பியுள்ளனர்.

புளூற்றோனிய சக்தியில் இயங்கும் இந்த ஆள்கள் இல்லாத விண்கலம் திட்டமிட்டபடி சனிக்கிரகத்துக்குச் செலுத்தப்பட்டதாக புளோரிடாவில் உள்ள கேப்கனரவெல் விண்வெளி நிலைய திட்ட கட்டுப்பாட்டு அதிகாரிகள் தெரிவித்தனர்.

தற்போது சுக்கிரன் கிரகத்தை நோக்கிச் செல்லும் இந்த விண்கலம் பின்னர் சனிக்கிரகத்துக்கான பயணத்தை ஆரம்பிக்கும்.

இந்த விண்கலத்தில் உள்ள நவீன கருவிகள் சனிக்கிரகத்தை படம் எடுப்பதுடன் அதனைச் சூழவுள்ள மண்டலத்தின் தன்மை பற்றிய விவரங்களையும், தரைத்தோற்றத்தையும் பூமிக்கு அனுப்பிவைக்கும்.

''காஸினி'' சனிக்கிரகத்தைச் சென்றடைய சுமார் 7 ஆண்டுகள் செல்லும்.

அணுசக்தி கொண்ட இந்த விண்கலம் வானில் செலுத்தப்படுவதை சுற்றுச் சூழல் பாதுகாப்பு ஆர்வலர்கள் எதிர்த்து வந்தனர். (ஐ)

# படத்தொடக்க விழாவை மகாராணி ஆரம்பித்தார்

சென்னைக்கு விஜயம் செய்துள்ள பிரிட்டிஷ் மகாராணி எலிஸபெத் நேற்று எம். ஜி. ஆர். திரைப்பட நகரில் நடிகர் கமலஹாசன் தயாரிக்கும் ''மருத நாயகம்'' என்ற திரைப்படத்தின் தொடக்க விழாவில் கலந்து கொண்டார்.

தொடக்க விழாவில் கலந்து கொள்வதற்காக அங்கு வருகை தந்த மகாராணியை முதல்வர் மு. கருணாநிதி வரவேற்றார்.

தென்னிந்திய திரையுலகப் பிரமுகர்கள் பலர் அங்கு திரண்டிருந்தனர்.

பிரிட்டிஷ் ஆட்சியாளர்களுக்கு எதிராகப் போராட்டம் நடத்தியதற்காக 1764 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 15 ஆம் திகதி தூக்கிலிடப்பட்ட மருதநாயகம் என்ற சுதந்திரப் போராட்ட வீரரின் கதையே ''மருதநாயகம்'' என்ற பெயரில் திரைப்படமாக்கப்படவுள்ளது.

இப்படத்தில் நடிகர் கமலஹாசன் பிரதான பாத்திரத்தில் நடிக்கிறார்.

மகாராணி நேற்று முன்தினம் இரவு விமானம் மூலம் சென்னை வந்தார். விமான நிலையத்தில் தமிழக ஆளுநர் செல்வி பாத்திமா பீபி, முதலமைச்சர் கருணாநிதி மற்றும் அமைச்சர்கள் அவரை வரவேற்றனர்.

பிரிட்டிஷ் மகாராணி 1961 ஆம் ஆண்டு முதன் முறையாகச் சென்னைக்கு விஜயம் செய்திருந்தார்.

சுமார் 30 ஆண்டுகளின் பின்னர் இப்போது அவரது விஜயம் இடம் பெறுகிறது. (ஐ)

### அச்சுவேலியில் அடுத்த ஆண்டு

# 14 லட்சம் ரூபா செலவில் உப அலுவலகக் கட்டடப் பணி

அச்சுவேலி, ஒக். 17

அச்சுவேலி பொதுச்சந்தையின் மேல் மாடியில் பொதுநூலகம், பிரதேச சபை உப அலுவலகம் ஆகியவற்றுக்கான கட்டடங்கள் 14 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ளன.

மேற்படி கட்டடம் அமைப்பதற்கான பூர்வாங்க மதிப்பீட்டு வேலைகள் நிறைவு செய்யப்பட்டிருப்பதாகவும்— அடுத்த வருடத் தொடக்கத்தில் கட்டட வேலைகள் ஆரம்பமாகலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அச்சுவேலி பொதுநூலகம், உப அலுவலகம் என்பன தற்பொழுது தனியார் இல்லத்தில் செயற்பட்டுவருகின்றன. (ஐ-11)

## பஸ் நிலையத்தில் வெள்ளம் தேக்கம்

யாழ். பஸ் நிலையப் பகுதியில் மழை வெள்ளம் தேங்கி நிற்பதால் பயணிகள் வெள்ளத்தில் நடந்து சென்றே பஸ்களில் ஏறுவதாகவும், பொதிகளுடன் வரும் பயணிகள் இதனால் பெரும் சிரமங்களுக்கு உள்ளாவதாகவும் தெரிவித்தனர்.

# மனிதனுக்குச் செய்யும் சேவையே இறைவனுக்குரிய தியானம்

## தமது மார்க்கம் இதுவே என்றார் சுவாமி சிவானந்தர்

சுவாமி சிவானந்தர் ஒரு சமயம் ஒரு குழந்தை போன்று ஆனந்த குடிலிலிருந்த மூன்று கடிகாரங்களை பஞ்சாபி டாக்டர் ஒருவரிடம் காட்டினார்.

''ஒன்று இங்கே இருக்கும், ஒன்று படுக்கை அறையில் இருக்கும். இவை நான் வேலையில் காலந்தவறாமல் இருக்க உதவுகின்றன; வேலை தலையான முக்கியத்துவம் உடையது. இதுதான் எனது வேலை செய்யும்பாணி'' — என்று கூறினார்.

''சுவாமிஜி நீங்கள் ஒவ்வொருநாளும் மிக அதிகமாக வேலை செய்கிறீர்கள். பல விடயங்களைப்பற்றி எழுதுகிறீர்கள். இது உங்களுக்கு எப்படிச் சாத்தியம் என்று எனக்குத் தெரியவில்லை. எப்பொழுதும் எழுச்சியூட்டக் கூடிய எண்ணங்கள் எப்படி முடிவுற்ற தொடராக உங்களுக்கு வந்து கொண்டு இருக்கின்றன. எப்பொழுதாவது சிறந்த எண்ணங்கள் எங்களுக்கு மின்னல் போல் தோன்றுவதுண்டு. சில நாள்கள் தொடர்ந்து நல்ல கருத்துக்கள் எங்களுக்குப் பொங்கி வரலாம். அத்தனையும் எழுச்சியூட்டுவனவாக அமைவதில்லை. எழுச்சியூட்டக் கூடிய எண்ணங்கள் கங்கை போல் பொங்கி வருவதில்லை. ஆனால் உங்களுக்கு இரண்டுமே வாய்த்திருப்பதாகத் தெரிகிறது. அந்த இரகசியம்என்ன சுவாமிஜி?'' என்று கைலாசநாத் என்ற பஞ்சாபி சுவாமி சிவானந்தரிடம் கேட்டார்.

''நானறியேன்'' என்றார் குருதேவர்.

''எல்லாமே தனித்தன்மையுடையதாக இருக்கிறது சுவாமிஜி. உங்களிடமிருந்து கற்றுக் கொள்ள வேண்டியது பல உள்ளன. காலமெல்லாம் உங்கள் பாத கமலங்களுக்கு அருகே அமர்ந்து தனித்தன்மையுடைய உங்கள் சேவை முறைகளைக் கற்றுக் கொள்ளநான்விழைகிறேன்'' — என்றார் அந்தப் பஞ்சாபி மீண்டும்.

''ஆமாம், ஆமாம் இங்குள்ளவர்களைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள். அவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் பாணியில் தனித்தன்மை வாய்ந்தவர்களே. சிலர் கவிஞர்கள், சிலர் டாக்டர்கள், சிலர் பேச்சாளர்கள், சிலர் ஞானிகள், சிலர் சிறந்த சிந்தனையாளர்கள்'' என்றார் சுவாமி சிவானந்தர்.

ஓ சிவானந்தாஜி, மிகச் சிறந்த அறிவாளி நீங்கள். அவர்கள் நூல்களைப் படித்ததில்லை அல்லவா? ''ஞான ஒளி ஊற்று'' என்ற அவரது நூலை யான் உங்களுக்குக் கொடுக்கிறேன். இதுமிகவும் எழுச்சியூட்டக் கூடியது. அவர் இவ் எழுச்சியூட்டக் கூடிய பிரசங்கியுமாவார். சமீபத்தில் பீகார் மாநிலத்தில் தொடக்க விழாவில் பீகார் கவர்னர் தலைமையில் பேசினார். மக்கள் புளகாங்கிதம் அடைந்தார்கள். உலகம் தழுவியபரிசுத்த இதயம் படைத்தவர் அவர். அதுதான் அவருக்கு அந்த மந்திர சக்தியை அளிக்கிறது —

**ஞானக் கதிர்**

அவர் தொட்ட மாத்திரத்திலேயே நோயாளி குணமடைவார். இங்கே உயர் படிப்பு படித்த டாக்டர் இருந்தபோதிலும் மக்கள் சிவானந்தாவிடம் தான் சிகிச்சைக்குச் செல்வார்கள். அவருக்குத் தேள் கடி விஷத்தை இறக்கும் மந்திரமும் தெரியும், அது அவருக்கு மாயாஜாலம் போன்று செயற்படுகிறது. விஷம் ஒரு நிமிடத்தில் இறங்கி விடுகிறது. அவர் எந்த மந்திரத்தையும் ஒரு தரம் சொன்னாலே அதில் சித்தி பெற்றுவிடுகிறார். அவர் ஓர் முனிவர். அவருடைய முற்பிறவியிலும் அவர் ஒரு பெரிய யோகியாக இருந்திருக்க வேண்டும். இந்தக் காலத்தில் இப்படிப்பட்ட ஒருவரைக்காண்பது கடினம். அவர் ஓர் அபூர்வமான ''அறிவாளி'' என்றார் — குருதேவர் சிவானந்தர் —

நீங்கள் கைவல்ய குகையைப் பார்த்திருக்கிறீர்களா? முன்பெல்லாம் [illegible] அங்கு செல்வேன். இப்பொழுது போவதில்லை. வேலை அவ்வளவு அதிகமாகிவிட்டது. இப்பொழுது எல்லாமே குகை என்று உணர்கிறேன். (இந்த நேரத்தில் அதாவது இதயமே உண்மையில் கைவல்ய குகை என்ற தாற்பரியத்தை விளக்குவது போல அவர் யதேச்சையாக தனது இதயத்தை சுட்டிக்காட்டினார்) ''இங்கிருந்து அலுவலகம் செல்கிறேன். மீண்டும் இங்கு திரும்பி வருகிறேன். சேவையேமிக உயர்ந்த முக்கியத்துவம் வாய்ந்தது. இதுவே எனது பாணி'' — என்றும் சுவாமி சிவானந்தர் சொன்னார்.

தான் எப்பொழுதாவது ஓய்வு எடுக்கும் 'ஈசி செயரை' டாக்டருக்குக் காண்பித்தார். இதுவும் இங்குள்ள தனித்தன்மை வாய்ந்த பொருள்களில் ஒன்று. பல்லாண்டுகளுக்கு முன்வாங்கப்பட்டது இதில் அமர்ந்தால் மெத்தையில் படுத்தது போல் இருக்கும் (இப்படிச் சொல்லிக் கொண்டே சிவானந்தர் அந்த நாற்காலியில் அமர்ந்தார்.) குளிராக இருந்தால் இந்தச் சால்வையைப் போர்த்திக் கொள்வேன். இதைச் சொல்லும் போதே அதைச் செய்தும் காண்பித்தார். ஒரு குழந்தை தன்னுடைய பொம்மைகளைக் காண்பிக்கும் ஆர்வத்தை இதில் காண முடிந்தது.

ஒரு சந்நியாசி ஒரு மேசை மணியைத் தட்டிக்கொண்டே இருக்கலாமா? ஒரு சந்நியாசி இதை வைத்திருக்கக் கூடாது. அதைப் பயன்படுத்தக் கூடாது என்றெல்லாம் மக்கள் நினைக்கிறார்கள்; ஆனால் அத்தகைய அபிப்பிராயங்கள் எனக்குக் கிடையாது. சேவையே முக்கியம். மனித குல நலத்திற்காக உழைத்துக் கொண்டே இருக்க வேண்டும். உடல் உள்ளம் இந்த இரண்டு கருவிகளையும் ஆரோக்கியமாகவும் தகுந்த நிலையிலும் வைத்திருக்க வேண்டும். நான் ஒரு வித்தியாசமான சந்நியாசி

சேவையே உனது தியானமாக இருக்க வேண்டும். [illegible] என்றார் குருதேவர்.

தொகுப்பு: க. கனகராசா


# குரும்பசிட்டி சன்மார்க்க சபை

## அமரர் த. இராசஇரத்தினம்

அதிபர் அவர்களின்

## 10-ம் ஆண்டு நிறைவு விழா

[இணுவில் கிழக்கு அம்மா அச்சகம் அருகே]

19 - 10 - 97 ஞாயிறு காலை 9. 30 மணி

[புதியநேரம்]

கலைப்பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை

தலைமையில்.

### முக்கிய நிகழ்வுகள்

I. உரை: ''கோயில் கலைகளும் வாழ்வியலும்''
திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம் அவர்கள்

II. பஜனை: அன்னைதாசன் க. ஆனந்தராசா குழுவினர்

III. கதாப்பிரசங்கம்: ''சிறுத்தொண்ட நாயனார்''
ஆசிரியமணி ஸ்ரீதயாளன் (B. A) அவர்கள்

அனைவரும் வருக.

பொ. பாலகுமார்,
பொதுச் செயலாளர்

குரும்பசிட்டி

[50593]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவ தினத்தை ஒட்டி குடாநாட்டில் பல நிகழ்வுகள்

யாழ்ப்பாணம் ஒக். 17

இலங்கை இராணுவத்தின் 48 ஆவது இராணுவ தினத்தை ஒட்டி யாழ். குடா நாட்டில் படையினர் பல்வேறு நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து நடத்தினர்.

மருத்துவ சேவை, சிரமதானம், அன்பளிப்பு என பல்வேறு நிகழ்ச்சிகள் பல இடங்களிலும் நடத்தப்பட்டதாக 51 ஆவது படையணியின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறுப்பிட்டிப்பகுதியில் இராணுவ மருத்துவ சேவை ஒன்று கடந்த 10 ஆம் திகதி நடத்தப்பட்டது. சுமார் 200-க்கு மேற்பட்ட நோயாளிகள் அதில் சிகிச்சை பெற்றனர்.

புத்தூரில் உள்ள வயோதிபர் இல்லத்தில் உள்ளவர்களுக்கு படையினர் தேநீர் விருந்துபசாரம் அளித்தனர். புத்தூர் ஆஸ்பத்திரியில் சிரமதானமும் நடைபெற்றது.

வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்திலும் சிரமதானப்பணி மூலம் கட்டடங்களும், சூழலும் துப்புரவாக்கப்பட்டன.

நவக்கிரிப்பகுதியில் பொது மக்களுக்கு உணவுப் பார்சல்கள் வழங்கப்பட்டன. அங்குள்ள அம்மன் கோயிலுக்குச் செல்லும் வீதி துப்புரவு செய்யப்பட்டது.

யாழ். போதனா வைத்திய சாலையில் உள்ளக நோயாளர்களுக்கும் பணியாளர்களுக்கும் சுமார் 600 மதிய போசனப் பார்சல்கள் வழங்கப்பட்டன. இராணுவத்தினர் அங்கு இரத்ததானமும் செய்தனர்.

யாழ். நகரில் உள்ள துரையப்பா விளையாட்டரங்கு சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டது.

கடந்த 9 ஆம் திகதி நல்லூர் கந்தசாமி கோயிலில் படையினரால் பூசை நடத்தப்பட்டது. யாழ். நாகவிகாரையில் போதி பூசையும் இடம் பெற்றது.

11ஆம் திகதி யாழ். ஆஸ்பத்திரியிலும் சென். நிக்கலஸ் வித்தியாலயத்திலும் படையினர் சிரமதானப்பணியில் ஈடுபட்டனர்.

ஓ. எல். ஆர். தேவாலயத்தில் பிரார்த்தனை ஒன்றும் நடத்தப்பட்டது.

உடுவிலில் உள்ள சிறுவர் இல்லத்தில் படையினர் சிரமதானம் செய்ததுடன் அங்குள்ள சிறுவர்களுக்கு மதிய போசனமும் வழங்கினர். உடுவில் மகளிர் கல்லூரியிலும் சிரமதானம் நடைபெற்றது.

அராலிப் பகுதி பாடசாலையிலும் சிரமதானம் நடைபெற்றது. வறிய மக்களுக்கு உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

மானிப்பாயில் ஆங்கில மெமோறியல் அநாதைச் சிறுவர் இல்லத்திலும் படையினர் சிரமதானம் செய்தனர்; மதிய போசனம் வழங்கினர்.

இணுவில் பகுதியில் இந்துக் கோயிலிலும், அந்தோனியார் தேவாலயத்திலும் பூசை, சிரமதானம் என்பன நடத்தப்பட்டன.

மல்லாகப் பகுதியில் இளவாலை பாடசாலை ஒன்றில் படையினர் சிரமதானம் செய்தனர். அப்பகுதி மக்களுக்கு 500 உணவுப் பார்சல்கள் வழங்கப்பட்டன. அங்குள்ள கோயிலிலும், தேவாலயத்திலும் நடந்த பூசையில் படையினர் கலந்து கொண்டனர்.

ஊர்காவற்றுறை ஆதார வைத்திய சாலையில் சிரமதானம் மூலம் சுத்திகரிப்புப் பணி மேற்கொள்ளப்பட்டது. உள்ளக நோயாளர்களுக்கும், பணியாளர்களுக்கும் மதிய உணவு வழங்கப்பட்டன. அல்லைப்பிட்டி பாடசாலைக்கென அமைக்கப்பட்ட தற்காலிக கொட்டகை பாடசாலை நிர்வாகத்திடம் வழங்கப்பட்டது.

— இவ்வாறு அந்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# அம்பலவாணரின் மறைவுக்கு ஈ. பி. ஆர். எல். எவ். இரங்கல்

யாழ்ப்பாணம், ஒக். 17

தென்னிந்தியத் திருச்சபையின் முன்னாள் ஆயர் அதி வண. டி. ஜே. அம்பலவாணரின் மறைவு குறித்து ஈ. பி. ஆர். எல். எவ். இரங்கல் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

யாழ்ப்பாணத்தின் கல்விப் பாரம்பரியத்தைப் பாதுகாப்பதில் கலாநிதி அம்பலவாணர் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டிருந்தார். யுத்தத்தினால் குற்றுயிராகியிருக்கும் யாழ்ப்பாணக் கல்வி நிலை தொடர்பாக உலகம் முழுவதும் சிதறுண்டு வாழும் யாழ். கல்வியாளர்கள் பலர் பாராமுகமாக இருக்கையில் கலாநிதி அம்பலவாணர் மிகக் கடினமான சூழ் நிலையில் உள்ளும் உடனும் வாழ்ந்து கல்வி மேம்பாட்டிற்காக உழைத்தவர். குறிப்பாக மேற்கு வலிகாமத்தில் கல்விப்பயிர் செழிப்புற அவர் பாடுபட்டிருப்பதை உணர முடிகின்றது.

யாழ்ப்பாணத்தின் கல்வி, வைத்திய சேவைகளின் பெருமைமிகு அங்கங்களாகத் திகழும் யாழ்ப்பாணக் கல்லூரி, உடுவில் மகளிர் கல்லூரி, இணுவில், மானிப்பாய் வைத்தியசாலைகளின் சேவைகளிலும் அம்பலவாணர் அவர்களின் பங்களிப்பு ஆழ்ந்த தடம் பதித்திருந்தது. அதே போல் யுத்தத்தினால் உருவாக்கப்பட்ட அநாதைச் சிறார்கள், விதவைகள், அகதி மக்களின் வாழ்வில் ஒளியேற்றுவதற்கும் அவர் பங்களிப்புச் செய்துள்ளார். உடல் ஊனமுற்றோர், முதியோர் ஆகிய பிரிவினரையும் அரவணைத்து பாதுகாப்பதில் பெருந் தொண்டு புரிந்துள்ளார்.

யாழ்ப்பாணக் கல்விக்குச் சேவையாற்றிய 25 ஆண்டுகளுக்கு முன் காலமான யாழ். ஆயர் அதி வந். எமிலியானுஸ் பிள்ளை, யாழ். நூல் நிலையம் எரியூட்டப்பட்ட செய்தி கேட்டு அதிர்ச்சியடைந்து மரணித்த அருட்திரு. தாவீது அடிகளார் ஆகியோர் வரிசையில் வைத்து எண்ணத்தக்கவர் கலாநிதி அம்பலவாணர்.

அன்னாரின் மறைவுக்காக அன்னாரின் குடும்பத்தினருக்கும், தென்னிந்திய திருச்சபைக்கும் ஈ. பி. ஆர். எல். எவ். தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கின்றது—என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# பாடசாலை மைதானத்தில் மண் மேடுகள் அகற்றப்பட்டன

உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தின் மைதானத்தில் இருந்த மண் மேடுகள் பாதுகாப்புப் படையினரின் உதவியுடன் கனரக வாகனம் மூலம் அகற்றப்பட்டு நிலம் மட்டமாக்கப்பட்டுள்ளது.

1995 ஆம் ஆண்டு படையினர் முன்னேறிய போது காவலரண்கள் அமைப்பதற்காக இம் மண்மேடுகள் உருவாக்கப்பட்டன.

இதன் காரணமாக இவ் விளையாட்டரங்கைப் பயன்படுத்த முடியாத நிலை இருந்து வந்தது. பாடசாலை அதிபரும் அபிவிருத்திச் சங்கச் செயலாளரும் மேற்கொண்ட முயற்சியின் பயனாக இம் மண்மேடைகளை அகற்றப் பாதுகாப்புப் படையினர் ஏற்பாடு செய்தனர். (ஐ-154)

# நல்லூர்ப்பகுதி ச. ச. நிலைய திருத்த வேலைக்கு நிதி உதவி

திருநெல்வேலி, ஒக். 17

நல்லூர்ப்பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட சேதமடைந்த சனசமூக நிலையங்களைத் திருத்துவதற்கு அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயத்தின் நிதி உதவித்திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் கோண்டாவில் ஞான வீர சனசமூக நிலையத்தின் திருத்த வேலைகளுக்கு 25 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது. இதனையடுத்து தற்போது இந் நிலையத்தில் திருத்த வேலைகள் நடைபெற்று வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-135)

## புத்தூர் ஆஸ்பத்திரி இயங்குகிறது

புத்தூர் பரி. லூக்கா மெதடிஸ்த வைத்தியசாலை மீண்டும் செயற்படுகின்றது.

அண்மைக்கால இராணுவ நடவடிக்கையால் பெருமளவு சேதமடைந்த இவ்வைத்திய சாலை திருத்தி அமைக்கப்பட்டு மீண்டும் வெளி நோயாளர் பிரிவு இயங்கத் தொடங்கியுள்ளது.

நோயாளர் விடுதிகள் திருத்தி அமைக்கப்பட்டதும் நோயாளர் தங்கி இருந்து சிகிச்சை பெறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும். (ஐ-11)

## கலந்துரையாடல்

யாழ். மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்களுக்கான கலந்துரையாடல் இன்று வெள்ளிக்கிழமை காலை 10-30 மணிக்கு நல்லூர் செட்டித் தெருவில் உள்ள யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பணிமனையில் உதவி ஆணையாளர் ரி. வி. கிருஸ்ணசாமி தலைமையில் நடைபெறும். (ஐ-30)


## விக்னா கல்வி நிறுவனம்

இந்து நாகரிகம்

திரு. பத்மராஜா

98 சங்க இலக்கியம் கூறும் சமயம் (12—1 மணி)

99 உபநிடதம் (9—10 மணி)

நாளை ஆரம்பம்: 18-10-1997

(50596)



## வாழ்த்திப் போற்றுகின்றோம்

ஆசிரிய சேவையில் 25 வருடங்களைப் பூர்த்தி செய்துள்ள

"இசை மேதை வீணா சரஸ்வதி"

திருமதி

நீற்றா ஞானதீபம் சுகந்தநாதன்

அவர்களின் சேவை செழித்து பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றோம்.

யாழ். சென். ஜேம்ஸ் ம. வி. பாடசாலைச் சமூகம்.

(50598)



## கொக்குவில் இந்துக் கல்லூரி அபிவிருத்திச் சங்க கூட்டம் பிற்போடப்பட்டுள்ளது

18 - 10 - 1997 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவிருந்த கொக்குவில் இந்துக் கல்லூரி அபிவிருத்திச் சங்கக் கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தினால் மறு அறிவித்தல் வரை பிற்போடப்பட்டுள்ளது என்பதை பெற்றோர்களுக்கு அறியத்தருகின்றோம்.

இ. சிவலிங்கம்.
செயலாளர்

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
கொக்குவில் இந்துக் கல்லூரி.

(சி/1795)



## அரியாலை ஐக்கிய கழக பொன் விழா - 1997

[ சுற்றுப் போட்டிகள் ]

II. எறிபந்தாட்டச் சுற்றுப் போட்டி

1. வடமாகாண ரீதியானது.
2. உள்ளூர் வாசிகளுக்கு

★ மென்பந்து
★ 7 பேர் கொண்டது
★ 12 ஓவர்
★ விண்ணப்பம் ரூபா 50
★ முடிவு: திகதி 30 - 10 - 97

தொடர்பு கொள்க:-

து. தேசியநாதன்
376/1, நாவலர் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

தலைவர்,
200 A, கண்டி வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

I. கரபந்தாட்ட சுற்றுப் போட்டி - ஓவர் கேம்

உள்ளூர் - முடிவுத் திகதி 30 - 10 - 97

[ கரபந்தாட்டப் பொறுப்பாளருடன் தொடர்பு கொள்ளவும் ]

[50592]



## அளவெட்டி வடக்கு தவளக்கிரி முத்துமாரி அம்மன் கோயில் பரிபாலனசபை அறிவித்தல்

அம்பிகை அடியார்களே! மேற்படி ஆலயத்தில் கடந்த ஐந்து வருட காலமாக நடைபெறாமல் இருந்த பூசைகளை மீண்டும் ஆரம்பிப்பது பற்றி ஆலோசிப்பதற்காக எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை 19 - 10 - 1997 முற்பகல் 9-00 மணிக்கு ஆலய மண்டபத்தில் ஓர் ஆலோசனைக்கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இதில் மேற்படி ஆலய பரிபாலன சபையினர், தொண்டர்சபையினர் உபயகாரர்கள், அடியவர்கள் அனைவரையும் பங்கு பற்றி ஒத்துழைக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

மேலும் ஆலயத்திற்குரிய பல லட்ச ரூபா பெறுமதியான உபகரணங்கள், தளபாடங்கள், தேர்த் திருப்பணிக்குரிய பலகைகள், இரும்பு அச்சுகள் ஆகியன காணாமற் போயுள்ளன. அவை தடுப்பணைகளிலும், வெளிகளிலும் இருப்பதாக அறியப்படுவதால் அவற்றைக் காண்பவர்கள் ஆலயத்தில் ஒப்படைக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

நன்றி!

ந. துளசிதாசன் — பொருளாளர்
க. சின்னத்தம்பி — தலைவர்

மயிலோடை, அளவெட்டி.

(50588)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### குடா நாட்டில் காணாமற்போனோர் பற்றி

# சுதந்திரமான விசாரணை நடத்த

# ஐ.நா. குழுக்களை அனுப்பிவையுங்கள்

## ஐ. நா. செயலருக்கு மகஜர்

**குடாநாட்டில் கைதாகித் தகவல் தெரியாதுள்ளவர்களின் கதி பற்றி அறிந்து கொள்ள உதவுமாறு கோரி ''கைதானோர் தகவலற்றோர் பாதுகாவலர் சங்கம்'' ஐ. நா. செயலாளர் நாயகத்துக்கு அனுப்பி வைத்துள்ள மகஜர் இது.**

இலங்கையில் தற்போது ஆட்சி புரியும் ... சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தலைமையிலான பொதுசன ஐக்கிய முன்னணி அரசு 1996 மே மாதமளவில் யாழ். மாவட்டத்தில் 'ரிவிரச' எனும் பெயரில் இராணுவ நடவடிக்கையை மேற் கொண்டது. இந்த இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ளும்போது யாழ். மாவட்டத்தில் வசிக்கும் தமிழ் மக்களுக்கும் அவர்களது உடைமைகளுககும் பாதுகாப்புப் படையினரும் அரசும் பூரணமான பாதுகாப்பினை வழங்குமென வெகுஜன தொடர்புச் சாதனங்கள் மூலமாக எமக்கு உறுதியளிக்கப்பட்டது. அதன் பிரகாரம் பல துயரங்களோடு நாம் வாழ்ந்து வந்த போது விடுதலைப் புலிகளுக்கும் பாதுகாப்புப் படையினருக்குமிடையே மோதல்கள் ஆரம்பமாகின.

இம் மோதல்களின் பின்னணியில் 600-க்கு மேற்பட்ட பாடசாலை மாணவர்கள், பல்வேறு தொழில் புரிவோர் பல்கலைக்கழக மாணவர்கள் ஆசிரியர்கள், அரச சார்பற்ற அமைப்புக்களில் கடமை புரிவோர், அரசாங்கஊழியர்கள் என எமது பிள்ளைகளும், கணவன்மார்களும் எம் முன்னிலையில் சுற்றி வளைப்புக்கள் மூலமும், திட்டமிட்ட பலாத்காரவழிமூலமும், சோதனைச் சாவடிகளில் வைத்தும் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டனர்.

அதேவேளை இராணுவ நடவடிக்கைக்கு பயந்து தமது உயிர்களைப் பாதுகாக்க முற்பட்டு கடல் மூலமாக வேறிடங்களுக்கு இடம்பெயர முற்பட்ட பொது மக்களும் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர். எனவே இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் தொடர்பாக பெற்றோர், உறவினர்களாகிய நாம் கடற்படை இராணுவ உயர் அதிகாரிகளோடு தொடர்பு கொண்ட போது தாம் கைது செய்யவில்லையென அவர்கள் கைவிரித்தனர்.

இதன் பின்னணியில் பெற்றோர், உறவினர்களாகிய நாம் 'கைதானோர் தகவலற்றோர் பாதுகாவலர் சங்கம்' எனும் அமைப்பை உருவாக்கினோம். இவ்வமைப்பு ஊடாக பல அரசியல் கட்சிகள் உள்ளூர், சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகளுக்கு எமது அவல நிலையை நாம் தெரியப்படுத்தினோம்.

மேலும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் பொதுச் செயலாளர் மதிப்பிற்குரிய டக்ளஸ் தேவானந்தா பா. உ அவர்கள் கைது செய்யப்பட்டோர் விடயம் தொடர்பாக அக்கறை கொண்டு எம்மையும் மாண்புமிகு ஜனாதிபதி அவர்களுடன் தொடர்பு கொள்வதற்கு பல சந்தர்ப்பங்களில் வைத்தும் மேற்கொண்ட போதும் அது இன்று வரை கைகூடவில்லை.

தங்களது கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் ஐ. நா. மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் சர்வதேச மன்னிப்புச் சபை போன்ற அமைப்புக்கள் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்து கைது செய்யப்பட்ட பிள்ளைகளின் பெற்றோர்களாகிய, உறவினர்களாகிய எம்மை சந்தித்து மனித உரிமைகள் தொடர்பாககலந்துரையாடினார்கள். இக் கலந்துரையாடலின் போது கைது செய்யப்பட்டு தகவல் அற்ற எமது பிள்ளைகளின் நிலை பற்றி இலங்கை அரசுடன் தொடர்பு கொண்டு பதில் கூறுவதாக கூறிச் சென்றார்கள். இவர்களிடமிருந்து இதுவரை எமக்கு எவ்விதமான பதிலும் கிடைக்கவில்லையென்பதை தங்கள் கவனத்திற்கு கொண்டு வரவிரும்புகிறோம்.

சர்வதேச மனித உரிமை அமைப்புக்களின் அழுத்தத்தினைத் தொடர்ந்து இலங்கையரசின் பாதுகாப்பு அமைச்சினால் நியமிக்கப்பட்ட விசாரணைக்குழு 4 கட்டங்களாக விசாரணைகளை நடத்தியது.

இவ் விசாரணையின் பிரகாரம் ஏறத்தாழ 182 நபர்களின் பெயர்களை வெளியிட்டது. இவ்வெளியீட்டில் இடம் பெற்ற பெயர்கள் ஏற்கனவே செஞ்சிலுவை சர்வதேசக் குழுவால் உறுதிப்படுத்தப்பட்டு சிறைகளில் தங்கியிருப்போரும் விடுதலை செய்யப்பட்டோருமே ஆவர்.

1996 ஆனி, ஆடி, ஆவணி, புரட்டாதி மாதங்களில் கைது செய்யப்பட்டவர்களும் 95, 94-ம் ஆண்டுகளில் கடற்பரப்பில் வைத்து கைது செய்யப்பட்டவர்களுமாக ஏறத்தாழ 600 பேரின் நிலை பற்றி தெரியப்படுத்தப்படவில்லை. இந்நிலையில்-கைது செய்யப்பட்டு தகவல் அற்றிருக்கும் 600 பேரின் பிள்ளைகளின் பெயர்களை அரசு வெளியிடாத பட்சத்தில் பாதுகாப்பு படை மூலம் திட்டமிட்ட இனப்படுகொலையை அரசு நிகழ்த்தி இருக்கலாமென நாம் அஞ்ச வேண்டியிருக்கிறது.

பாதுகாப்பு படையினரால் கைது செய்யப்பட்டு தகவல் அற்றிருக்கும் எமது பிள்ளைகளின் நிலைபற்றி தெரியப்படுத்துமாறு இலங்கையரசை வற்புறுத்திக் கேட்குமுகமாக சாத்வீக ரீதியிலான உண்ணாவிரதப் போராட்டங்களை நாம் நடத்தி வருகின்ற போதும் இன்றுவரை அரசிடமிருந்து எவ்வித பதிலும் கிடைக்கவில்லை.

இந்நிலையில் அண்மையில் தங்களைச் சந்தித்த இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் மனித உரிமைகளைப் பேணுவதில் இலங்கை முன்னணி வகிப்பதாகவும், இலங்கை அரசின் நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்ட எந்தவொரு பிரஜையும் ஐ. நா. மனித உரிமைகள் அமைப்பிற்கு புகார் செய்யலாம்மெனக் கூறியதாகவும் பத்திரிகைச் செய்திகள் மூலம் அறிந்துகொண்டோம்.

அமைச்சரின் மேற்படி கூற்றினை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். ஏனெனில், இலங்கையரசின் பாதுகாப்பு படைகளினால் யாழ். மாவட்டத்தில் மனித உரிமை மீறல்கள் (கற்பழிப்புக்கள், முகாம்களில் சித்திரவதை, ஆள்கள் காணாமற் போதல், விசாரணையின்றி நீண்டகாலம் தடுத்து வைத்தல்) இடம்பெற்றுள்ளன.

எனவே கைது செய்யப்பட்டு தகவல் அற்றிருக்கும் எமது பிள்ளைகளின் நிலை பற்றி இலங்கையரசிடம் இருந்து பதிலைப் பெற்றுத் தருமாறு வேண்டும் அதே வேளை இவ்விடயம் தொடர்பாக சுதந்திரமான விசாரணைகளை மேற்கொள்வதற்கு ஐ. நா. வின் மனித உரிமை அமைப்பினை யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைக்குமாறும்தாழ்மையாக வேண்டுகிறோம். — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# வயல் விதைப்பு வேலைகள்

## வலி. மேற்கில் மும்முரம்

வலி.மேற்கு, ஒக். 17

மழை பெய்ததைத் தொடர்ந்து வலிகாமம் பகுதியில் பெரும் போக நெற்செய்கை ஆரம்பமாகியுள்ளது.

பல நாள்களாக மழையினை எதிர்பார்த்திருந்தவிவசாயிகள் கடந்த வாரம் பெய்தமழையை தொடர்ந்து வயலில் விதைப்பு வேலைகளில் மும்முரமாக ஈடுபட்டிருக்கிறார்கள்.

மூளாய், பொன்னாலை, நெல்லியான், சுழிபுரம்ஆகிய பகுதிகளிலும் காலபோக நெற் செய்கைக்கான வேலைகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

அத்துடன் இங்கு மேட்டு நிலப்பயிர்ச் செய்கைக்கான வேலைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

[ஐ - 30 - 152]

# நெற்செய்கையாளர்களுக்கு பங்கீட்டு அடிப்படையில் யூரியா

நெல்லியடி, ஒக். 17

யாழ். மாவட்ட நெற்செய்கையாளர்களின் நலன் கருதி யூரியா உரம் பங்கீட்டு அடிப்படையில் வழங்கப்படவுள்ளது.

நெற் செய்கையில் முன்னணியிலுள்ளவர்களுக்கே, அவ்வப்பகுதி கமக்காரர் அமைப்பின் பெயர்ப்பட்டியல் மூலம் யூரியா வழங்கப்படும்.

யூரியா உரம் பெறத் தகுதியுடையோர்களின் பெயர்ப் பட்டியல்களை கமநல கேந்திர நிலையங்களுக்கு அனுப்பி வைக்குமாறு புலோலி கமநல கேந்திர உதவி ஆணையாளர் எஸ். உருத்திரேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கொழும்பிலிருந்து கப்பல் மூலம் கொண்டுவரப்பட்ட யூரியா உரம், தற்பொழுது காங்கேசன்துறையில் களஞ்சியப் படுத்தப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-109)

### சுவரொட்டிகள்

தென்மராட்சி, ஒக். 17

அரசின் செயற்பாடுகளைக் கண்டிக்கும் சுவரொட்டிகள் சாவகச்சேரி நகரப்பகுதியில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியால் ஒட்டப்பட்டுள்ளன. (ஐ-117)

# சிறுதானியம் பயிரிட தென்மராட்சியில் ஊக்குவிப்பு

தென்மராட்சி, ஒக். 17

குடாநாட்டில் மழை காலம் ஆரம்பித்துள்ளதால் தென்னந் தோட்டங்கள், வான் பயிர் உள்ள நிலங்கள், தரிசாக விடப்பட்டுள்ள நிலங்கள் ஆகியவற்றில் சோளன், நிலக் கடலை, கௌபி போன்ற சிறுதானியப் பயிர்வகைகளைப் பயிரிடுமாறு தென்மராட்சி விவசாய திணைக்களம் அறிவித்துள்ளது.

அதிக விளைச்சலைத் தரக்கூடிய விதைகள் தென்மராச்சிப் பிரதேச கமநல சேவைகள் நிலையங்களில் பெற்றுக் கொள்ளலாமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது (ஐ-[illegible])

### குடி தண்ணீர் கொள்கலன்கள்

புங்குடுதீவு மக்களின் குடி தண்ணீர்த்தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் மடத்துவெளி, ஆலடி, பெருங்காடு, சிறுப்பிட்டிப் பகுதிகளிலும்—

நெடுந்தீவு நயினாதீவுப் பயணிகளின் நலன் கருதி குறிகாட்டுவான் துறைமுகத்திலும் குடி தண்ணீர்க் கொள்கலன்கள் வைக்கப்பட்டுள்ளன.

அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின் உதவியுடன் இக் கொள்கலன்கள் வைக்கப்பட்டுள்ளன.

(ஐ-[illegible])

### மொறட்டுவ பல்கலைக் கழக

# தொழில் நுட்ப டிப்ளோமா பரீட்சைக்கு 61 பேர் தெரிவு

மொறட்டுவ பல்கலைக் கழகத்தில் 1996 - 97 ஆம் ஆண்டுக்கான தேசிய தொழில் நுட்ப டிப்ளோமா (என். டி. ரீ.) பயிற்சி நெறிக்கு மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான பிரவேசப் பரீட்சைக்கு அனுமதி பெற்றுள்ள மாணவர்களின் விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இவர்களுக்கான அனுமதிப் பரீட்சை அடுத்த மாதம் 8 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு மொறட்டுவ பல்கலைக் கழகத்தில் நடைபெறவுள்ளது.

ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சைப் பெறுபேற்றுச் சான்றிதழ், பாடசாலை விடுகைப் பத்திரம் ஆகியவற்றின் உறுதிப்படுத்திய பிரதிகளைச் சமர்பித்தாலே பரீட்சைக்குத் தோற்ற முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கான அனுமதி அட்டைகள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

பிரவேசப் பரீட்சைக்கு அனுமதி பெற்றுள்ள யாழ். மாவட்ட மாணவர்களின் பெயர் விவரங்கள் பின்னர் உதயனில் வெளியாகும். (ஐ)

### விவசாயிகள் பயிற்சி நெறி

சண்டிலிப்பாய், ஒக். 17

யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி சபை, யாழ். மாவட்ட ஒன்றிணைந்த கூட்டுறவுக் கல்வி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் பண்டத்தரிப்பு பலநோக்குகூட்டுவுறச் சங்கத்தில் விவசாயிகளுக்கான பயிற்சிநெறியொன்றை அண்மையில் நடத்தியது.

பண்டத்தரிப்பு ப.நோ.கூ. சங்கத் தலைவர் ச.செல்வரத்தினம் தலைமையில் நடைபெற்ற இக் கருத்தரங்கில் கால போக நெற்செய்கைக்கு உரமிடுதல், கிருமிநாசனி தெளித்தல், களை கொல்லி தெளித்தல் மற்றும் விவசாய உள்ளீடுகளைப் பெறுதல் ஆகிய பலவேறு விடயங்கள் தொடர்பாக விவசாய திணைக்கள உத்தியோகத்தர்களால் கருத்துரையும், பயிற்சிகளும் வழங்கப்பட்டன.

(ஐ-135)

### அமைதி வேண்டி விசேட வழிபாடு

நாட்டில் அமைதி வேண்டி இம்மாதம் 31 ஆம் திகதி வெள்ளிக்கிழமை யாழ். மரியன்னை பேராலயத்தில் விசேட வழிபாடுகள் யாழ். ஆயர் அதிவந். தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை அவர்களால் நடைபெற உள்ளன.

அன்றைய தினம் பிற்பகல் 3. 30 மணியளவில் குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் இருந்தது செபமாலைப் பவனி யாழ். மரியன்னை பேராலயம் நோக்கி நடத்தப்படும். அதனைத் தொடர்ந்து அங்கு பூசைப் பலியும், சமாதானம் நிலைக்க வேண்டும் என்ற தொனியில் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும்.

(ஐ-51)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

பிறிமா கைலையின் பிறவுண், வெள்ளை பேட்டுக் கோழிக் குஞ்சுகள் 17-10-97 அன்று ஒருநாள் குஞ்சும், 29-10-97 அன்று ஒரு மாதக் குஞ்சும் விற்பனைக்குண்டு. முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளவும். தொடர்பு:- சே. கிருஷ்ணகுமார், சண்டிலிப்பாய் வீதி, மானிப்பாய் (பிப்பிலி சந்திக்கு முன்பாக) அல்லது கண்ணா வீடியோ சென்றர், உடுவில். [50498]

### தவறிவிட்டது

விமலாதேவி செல்லத்துரை என்பவரது 467831666V இலக்க தேசிய அடையாள அட்டையும், விசேட அடையாள அட்டையும் தட்டா தெருச் சந்திக்கும் ஐயனார் கோயில் வீதிக்குமிடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் இல. 12, ஐயனார் கோயில் வீதி, வண்ணார் பண்ணை எனும் விலாசத்தில் ஒப்படைக்கவும். [50556]

வசந்தரூபன் சுஜாதா என்பவரது விசேட அடையாள அட்டை, பாஸ் என்பன ஆரியகுளம் சந்திக்கும், திருநெல்வேலிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியில் ஒப்படைக்கவும். சுப்பிரமணியம் செல்வராசா, பாரதி புலம், கலாசாலை வீதி, திருநெல்வேலி (தயவுடன் ஒப்படைத்து உதவுங்கள்). [50557]

3 ஆம் வட்டாரம் வடக்கு அனலைதீவைச் சேர்ந்த வாசுகி பொன்னம்பலம் என்பவரது 685161214V இலக்கமுடைய தேசிய அடையாள அட்டை கந்தர்மடம் சந்திக்கும், சர்வகலாசாலைச் சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து பின்வரும் முகவரியில் ஒப்படைக்கவும். Mr. தம்பித்துரை, No 29, அரச வீதி, நல்லூரர். [50584]

### வறுமை ஒழிப்புத் தினம்

'நம்முடைய ஆசைகளை குறைத்துக் கொண்டு ஏழைகளுக்கு ஓரளவு மிஞ்சும்படி செய்வது நமது கடமை' மகாத்மாவின் போதனையை செயற்படுத்தி சிக்கனமாக வாழ்வோம். மேலுறைகளுக்கு படிப்பினை நூல் காந்தி, திருவள்ளுவர் படம் வழங்கப்படும், மில்க்வைற் செய்தி. [சி/1792]

### தென்னம் நாற்றுக்கள்

உடன நடுகைக்குகந்த, நல் இன தென்னம் நாற்றுக்கள் செவ்விளை, வத்தாவி, மாலை தீவு, சாதாரணம் குறுகிய காலத்தில் பலன் தரக் கூடியவை விற்பனைக்குண்டு. தொடர்பு: மு. காங்கேசு, ஐயாகடையடி, கண்டி வீதி, மீசாலை. [50590]

**Spoken English**
BY:
**BRITTO**
புதிய பிரிவு
ஆரம்பம்: 18 - 10 - 97
( 2 மணி )
**புதிய உயர் கல்லூரி**
ஆரியகுளம் சந்தி - யாழ்.
(49818)

### உடன் விற்பனை

பிறிமா பிறவுண், வெள்ளை 5 நாள் பேட்டுக் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. மற்றும் புறோயிலர் குஞ்சுகளுக்கும் முன் கூட்டியே தொடர்பு கொள்ளவும். ''மல்லிகாபதி'', சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். [50589]

### கற்பித்தல்

கணக்கு ஆய்வு, கணக்கியல் A/L-க்கு படிப்பித்தல். தொடர்பு: A.R. சிவம், மாரி அம்மன் வீதி, திருநெல்வேலி தெற்கு, திருநெல்வேலி. [50570]

**பொஸ்கோ**
யாழ்.
**A/L 98**
**ஒற்றைப் பதிவு**
ஆரம்பம்:
18 — 10 — 1997
1-00 மணி
**S. D. J. Sutharshan**
(50586)

## வாழ்த்துகின்றோம்



திருகோணமலை
மெதெடிஸ்த பெண்கள் ஆங்கிலப் பாடசாலையின் முன்னாள் பிரதி அதிபரும் தற்போது பருத்தித்துறை மெதெடிஸ்த பெண்கள் பாடசாலையின் சிரேஷ்ட ஆசிரியருமான
**செல்வி ஈடித் இன்பமலர் நல்லதம்பி**
தனது 39 வருட கற்பித்தற் சேவையைப் பூர்த்தி செய்து இன்றுடன் ஓய்வு பெறுகின்றார்.

கற்பித்தல் சேவையைத் திருமலையில் ஆரம்பித்த இவர் இயல், இசை, நாடகம், சாரணியம், விளையாட்டுப் போன்ற இணைப் பாடவிதான செயல்களில் திறம்பட உழைத்தார். பாடசாலையில் விஞ்ஞான ஆய்வு கூடத்தை நிறுவ உறுதுணையாக இருந்தார். 1973 ஆம் ஆண்டு தனது சுய விருப்பத்தின் பேரில் மாற்றலாகிச் சென்ற போது திருமலை கண்ணீருடன்தான் விடை கொடுத்தது.

இவர் ஒரு சிறந்த நிர்வாகி. விஞ்ஞான பட்டதாரியாகிய இவருக்கு டிப்ளோமா, கல்வி முதுகலைமாணி ஆகிய இரு மேலதிக பட்டங்களும் உண்டு. கண்டிப்பு, ஒழுக்கம் ஆகியவற்றை மாணவர்களிடையே கடைப் பிடித்ததுமன்றி, அன்பையும், இரக்கத்தையும் விதைத்து அவர்களது நன்மதிப்பைப் பெற்றுள்ளார்.

பருத்தித்துறையைச் சேர்ந்த காலஞ் சென்ற புகையிரத நிலைய அதிபர் திரு. J. C. நல்லதம்பியினதும், திருமதி நேசரத்தினம் நல்லதம்பியினதும் புதல்வியாகிய இவர் தேகாரோக்கியத்துடன் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

(சி-1777) **திருமலை நண்பர்கள்**

## மாநகர சபைப் பகுதியில் மலத்தியோன் விசிறும் பணி

யாழ்ப்பாணம், ஒக். 17

யாழ். மாநகர சுகாதாரப் பகுதியினர் நாவாந்துறைப் பகுதியில் மக்கள் வாழும் இடங்களில் மலத்தியோன் விசிறி வருகின்றனர்.

தற்போது மழை காலம் ஆரம்பித்துள்ளதால் மலேரியா மற்றும் தொற்று நோய்கள் பரவுவதைத் தடுக்கும் முகமாக மலத்தியோன் விசிறும் நடவடிக்கையை சுகாதாரப் பிரிவினர் ஆரம்பித்துள்ளனர்.

மாநகர சுகாதாரப் பிரிவில் மக்கள் நெருக்கமாக வாழும் பகுதிகளில் மலத்தியோன் விசிறும் பணி துரித கதியில் மேற்கொள்ளப்படும் என மாநகர சுகாதாரப் பகுதி அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## வெங் விலை உயர்வு

வெங்காயத்தின் விலை உயர்ந்துள்ளது. கிலோ 16 ரூபா முதல் 18 ரூபா வரை விற்பனையான வெங்காயம் இப்போது பொதுச் சந்தைகளில் கிலோ 28 ரூபாவாக விற்கப்படுகிறது. (ஐ-154)

**கரவெட்டி தச்சன்தோப்பு**
## சிந்தாமணி விநாயகர் ஆலயம்

**வள்ளியம்மன் திருமணப்படனமும் கந்தபுராண பூர்த்தியும்**

அன்புடையீர்!

எதிர்வரும் 19 - 10 - 97 ஞாயிற்றுக்கிழமை காலை 6.00 மணிக்கு பூசை ஆரம்பித்து கந்தபுராணப் படனம் தொடரும். பிற்பகல் 4.00 மணிக்கு விசேட பூசை நடைபெற்று, முருக பெருமான் வள்ளி தெய்வானை சமேதராக எழுந்தருளி அருள் பாலிப்பார்.

பௌராணிகர்களும், ஆர்வலர்களும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகிறோம்.
அனைவரும் வருக! முருகன் அருள் பெறுக!

— ஆலய பரிபாலன சபை

கரவெட்டி மத்தி,
கரவெட்டி.

[சி/1785]

உ

**துணவி அரசடிப் பிள்ளையார் கோயில்**
## பாலஸ்தாபன அபிஷேகம்

பழைமைவாய்ந்த மேற்படி ஆலய கட்டடங்களை புனரமைப்பதற்கு திருவருள் கைகூடியுள்ளது. விரைவில் வேலைகள் ஆரம்பமாகும்.

அராலியூர்
**சிவஸ்ரீ க. சிவசுப்பிரமணியக் குருக்கள்**
தலைமையில் பாலஸ்தாபனம் நடைபெறும்
அதன்பிரகாரம்

**19—10—1997** ஞாயிற்றுக்கிழமை காலை **9-00** மணி முதல் கிரிகைகள் ஆரம்பமாகி பிள்ளையார் மற்றும் பரிவார மூர்த்திகளை அதற்கென அமைக்கப்பட்ட பாலாலயத்தில் ஸ்தாபிக்கப்படும்.

**20—10—1997** திங்கட்கிழமை காலை **6-02** மணி முதல் **7-20** மணி வரையுள்ள சுப முகூர்த்தத்தில் பாலஸ்தாபன அபிஷேகமும், அதனைத் தொடர்ந்து காலை **9.00** மணி வரை விசேட பூசையும் நடைபெறும்.

அடியார்கள் வந்து தரிசித்து அருள்பெறுக!

**- கோயில் பரிபாலன சபை**

துணவி,
வட்டுக்கோட்டை. (50578)

## கண்ணீர் அஞ்சலி

தென்னிந்திய திருச்சபையின் யாழ். ஆதீன முன்னாள் பேராயர் பேரருள்
**கலாநிதி D. J. அம்பலவாணரின்**
மறைவையிட்டு அஞ்சலிக்கின்றோம்.

''பின்பு விண்ணகத்திலிருந்து ஒரு குரலைக் கேட்டேன் இது முதல் ஆண்டவரோடு இணைந்த நிலையில் இறப்போர் பேறு பெற்றோர் என எழுது'' என்று அது ஒலித்தது.

தென்னிந்திய திருச்சபையின் முன்னாள் பேராயர் அதிவண. கலாநிதி D. J. அம்பலவாணரின் மறைவிற்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

திருவெளிப்பாடு கூறுவது போன்று அவருடைய இறைபணியிலே ''தருமம், விசுவாசம், சேவை போன்ற காரியங்கள் நிரம்பியிருந்தன. அவர் தம்முடைய மண்ணக வாழ்விலிருந்து இளைப்பாறினாலும் அவருடைய பிரயாசங்கள் அவரைப் பின் தொடரும்.' — திருவெளிப்பாடு 14: 13

**பண்டத்தரிப்பு திருச்சபை**
ஊழியரும், மக்களும்,
கரியேற் வின்சிலோ இல்லமும்.

(50583)

உ

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

எதிர்வரும் **18 — 10 - 1997** சனிக்கிழமை பிற்பகல் 4-30 மணிமுதல் 6-30 மணிவரையுள்ள சுபமுகூர்த்த வேளையில்

| திரு., திருமதி **அழகரத்தினம்** தம்பதிகளின் புத்திரன் திருவளர் செல்வன் **மணிவண்ணன்** அவர்களுக்கும் | திரு., திருமதி **சந்திரசேகரப்பிள்ளை** தம்பதிகளின் புத்திரி திருவளர் செல்வி **வசந்தமலர்** அவர்களுக்கும் |
|---|---|

கனடாவிலுள்ள ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தில் திருமணம் நடைபெற நிச்சயிக்கப்பட்டுள்ளது.

**19—10—1997** ஞாயிற்றுக்கிழமை அன்று மானிப்பாய் வீதி, உடுவிலிலுள்ள மணமகள் இல்லத்தில் மதியபோசன விருந்துபசார வைபவம் நடைபெறும். அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

திரு., திருமதி சந்திரசேகரம்பிள்ளை,
சங்கானை கிழக்கு, பண்டத்தரிப்பு.

(50535)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். நகரப் புடைவைக் கடையில் நள்ளிரவில் துணிகரத் திருட்டு!

யாழ்ப்பாணம், ஒக். 17

யாழ். நகரில் மின்சார நிலைய வீதிப்பகுதியில் உள்ள பிரபல புடைவைக்கடை ஒன்றில் இருந்து நேற்று முன்தினம் இரவு ஊரடங்கு நடைமுறையில் இருந்த சமயம் பல லட்சம் ரூபா பெறுமதியான உடுபுடைவைகளும், ரொக்கப் பணமும் திருடப்பட்டிருக்கின்றது.

கடையின் கதவுப் பூட்டுக்கள் உடைக்கப்பட்டு பணமாக 36 ஆயிரம் ரூபாவும், 7 இலட்சத்து 26 ஆயிரத்து 365 ரூபா பெறுமதியான தரம் மிக்க சாறிகள், சட்டைகள், ஷேர்ட், பேபிசூட் வகைகள் மற்றும் பலதரப்பட்ட துணி வகைகள் திருடப்பட்டுள்ளன.

அண்மைக்காலத்தில் இவ்வாறு இடம்பெற்ற நான்காவது திருட்டுச் சம்பவம் இதுவாகும்.

இச்சம்பவம் யாழ். நகர வர்த்தகர்களிடையே பெரும் அதிருப்தியைத் தோற்றுவித்திருந்ததை நேற்று அறிய முடிந்தது.

இத் திருட்டுச் சம்பவம் குறித்து யாழ். நகர கமாண்டர் பிரிகேடியர் சுஸந்த மெண்டிஸுன் கவனத்துக்குக் கொணடு வரப்பட்டதை அடுத்து யாழ். வர்த்தகர் சங்கப் பிரமுகர்களை அவர் அழைத்துப் பேசியதாகத் தெரிகின்றது. இன்னும் தொடர்ந்து பேச்சுக்கள் நடக்கும் என்றும் எதிர்பார்க்கப்பட்டது.

திருட்டுக் கும்பலைப் பிடிப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும்—

இனிமேல் இத்தகைய திருட்டுகள் இடம்பெறாத வகையில் கண்காணிப்பு தீவிரப்படுத்தப்படும் என்றும்—

யாழ். நகர இராணுவத் தளபதி உறுதியளித்ததாகத் தெரியவந்தது. (உ-15-111)

திருட்டுகளைத் தடுக்க

## பாதுகாப்புச் சேவை: புளொட் பிரஸ்தாபம்

யாழ்ப்பாணம், ஒக். 17

யாழ். நகரப் பகுதியில் திருட்டுச் சம்பவங்களைத் தடுத்து நிறுத்த தனியார் பாதுகாப்புச் சேவை ஒன்று உருவாக்குவது தொடர்பாக யாழ். நகர இராணுவத் தளபதியுடன் புளொட் அமைப்பு நேற்று பேச்சு நடத்தியது.

யாழ். நகரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கொள்ளை சம்பவம் தொடர்பாக இராணுவத் தளபதியுடன் கலந்துரையாடிய புளொட் அமைப்பு தனியார் பாதுகாப்பு சேவை உருவாக்குவது தொடர்பான ஆலோசனையை தெரிவித்தது.

வர்த்தகர்களின் பிரதிநிதிகளையும் சேர்த்து இன்று நகர இராணுவத் தளபதியுடன் கலந்துரையாடி இது குறித்து முடிவு செய்யப்படும் என்று 'புளொட்' வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-3)

## மீனவர் பிரச்சினைகள்: புளொட் ஆராய்கிறது

யாழ்ப்பாணம், ஒக். 17

குருநகர் மீனவர்கள் கடற்றொழில் மேற்கொள்வதில் உள்ள தடைகள் குறித்து புளொட் பிரதிநிதிகள் குழு ஒன்று நான்கு கடற்றொழிலாளர் சங்கப்பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்தியது.

புளொட் அமைப்பின் உப-தலைவரும், அந்த அமைப்பின் இராணுவத் தளபதியுமான என். மாணிக்கதாசன், யாழ். மாவட்ட பிரசார அமைப்பாளர் கிருபைராஜா ஆகியோர் நேற்று மாலை குருநகர் பகுதியில் மீனவர் சங்க பிரதிநிதிகளைச் சந்தித்து மீனவர் பிரச்சினைகள் தொடர்பாக அவர்கள் முன்னெடுக்கும் போராட்டத்துக்கு ஆதரவு வழங்குவதாக உறுதி கூறினர்.

இந்த விடயம் தொடர்பாக இன்று யாழ். நகர இராணுவ அதிகாரியுடன் பேச்சு நடத்த இருப்பதாகவும் —

அப்பேச்சில் பலன் கிடைக்காது விட்டால் உயர்மட்டத்துடன் பேசவிருப்பதாகவும்—

அதுவும் பலன் தராது விட்டால் வெகுஜனப் போராட்டம் முன்னெடுக்கப்படும் என்றும் —

''புளொட்'' அமைப்பின் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார். (உ-3)

## கலைப்பீட மாணவர் கூட்டம்

யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மாணவர்களுக்கான முக்கியமான கூட்டம் ஒன்று இன்று காலை 10.30 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறவிருப்பதாக கலைப்பீட மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது. (உ-3)

## சாவகச்சேரி இந்து பரிசளிப்பு இன்று

தென்மராட்சி, அக். 17

சாவகச்சேரி இந்துக்கல்லூரி பரிசில் நாள் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை காலை 9-30 மணிக்கு கல்லூரி அருணாசலம் மண்டபத்தில் அதிபர் க. சந்திரசேகரா தலைமையில் நடைபெறும்.

முதன்மை விருந்தினராக யாழ். கல்வி வலயம் 1 இன் பணிப்பாளர் சு. இரத்தினராசா கலந்துகொள்வார். (உ-117)

## சொந்த இடங்களுக்கு திரும்புவர்

வவுனியா, ஒக். 17

வவுனியாவில் இருந்து புதுக்குடியிருப்புக்கு நிவாரணப் பொருள்களை லொறியில் ஏற்றிச் சென்ற சமயம் படையினரால் கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்ட லொறிச்சாரதி, கிளினர் உட்பட 18 பேரும் வன்னியில் சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வவுனியாவில் உள்ள இடைத்தங்கல் முகாமில் வைக்கப்பட்டிருக்கும் இவர்களை சொந்த இடங்களுக்கு அனுப்ப வவுனியா அரச அதிபர் ஏற்பாடு செய்துள்ளார். (உ-3)

## மலசலகூடம்

நெல்லியடி, ஒக். 17

கரணவாய் சோளங்கன் சனசமூக நிலையத்தில் இயங்கும் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கென வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபை புதிய மலசலகூடத்தை அமைத்து வருகின்றது. (ஐ-109)

## வேலையிழந்த தபால் அதிபர்கள் எட்டுப் பேருக்கு மீண்டும் நியமனம்

யாழ்ப்பாணம், ஒக். 17

நாட்டில் ஏற்பட்ட பல்வேறு யுத்த அனர்த்தங்கள் காரணமாக தமது வேலைகளை விட்டு வேறிடங்களுக்கு இடம் பெயர்ந்து சென்றதால் வேலைக்கு சமுகமளிக்க முடியாது போனதற்காக தபால் திணைக்களத்தால் வேலை நீக்கம் செய்யப்பட்ட எட்டு உபதபால் அதிபர்களுக்கு மீண்டும் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், ஈ.பி.டி.பி செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா மேற்படி விடயம் தொடர்பாக தபாற் தொலைத் தொடர்புகள் அமைச்சர் மங்களசமரவீரவின் கவனத்திற்கு கொண்டு வந்ததை அடுத்தே இவர்கள் மீள்நியமனம் பெற்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

மீள் நியமனம் பெற்றவர்களின் பெயர் விவரம் வருமாறு:

★ எஸ். பத்மாசினி (9, இலந்தைக்குளம் வீதி, அரியாலை).

★ பி. சந்திரகலா (113, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி).

★ திருமதி ஸி. சத்தியானந்தன் (தாளையடி).

★ செல்வி ஆர். இராஜேஸ்வரன் (கோண்டாவில்).

★ திருமதி ஆர். செல்வராஜா (புதுமடம்).

★ திருமதி ரி. இராஜேஸ்வரி (வீளான்).

★ திருமதி கே. சீவரத்தினம் (குறிகாட்டுவான்).

★ ரி. ஜெயகுமாரி (கோண்டாவில் மேற்கு). (ஐ-5)

## ஆசிரியர் தெரிவுப் பட்டியலில் தவறு இருப்பதாக முறைப்பாடு

அச்சுவேலி, ஒக். 17

யாழ். மாவட்டத்தில் ஆசிரியர் பதவிக்கு ஆள்களைத் தெரிவு செய்வதற்கு புள்ளி அடிப்படையில் வெளியிடப்பட்ட பெயர்ப்பட்டியலில் தவறு இருப்பதாக வடக்கு-கிழக்கு மாகாண கல்வி அமைச்சிற்கு மேல் முறையீடு செய்யப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் ஆசிரியர் தெரிவு தொடர்பாக நேர்முகப் பரீட்சைக்கு 180க்கு மேற்பட்டவர்களின் பெயர் கொண்ட பட்டியில் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

நேர்முகப் பரீட்சைப் பட்டியலில் இடம் பெற்றவர்கள் கடந்த வருடம் நடைபெற்ற ''ஆசிரியர் பதவி போட்டிப் பரீட்சை'' யில் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

தெரிவுக்கான வெட்டுப் புள்ளி பிரதேச செயலக பிரிவு ரீதியாக வகைப்படுத்தப்பட்டிருந்ததாகக் கூறப்படுகின்றது.

பிரதேசவாரியாக குறிப்பிட்ட ஒரே புள்ளியைப் பெற்ற சிலர் நேர்முகப் பரீட்சைக்கு தெரிவு செய்யப்பட்டும் அதே புள்ளியைப் பெற்ற வேறு சிலர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படாதிருந்ததாகவும் கூறப்படுகின்றது —

உரிய புள்ளியைப் பெற்றும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படாதவர்கள் அது பற்றி வடக்கு — கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சிற்கு மேன் முறையீடு செய்துள்ளனர். (ஐ-11)

### நாளை

**ஐப்பசி 1**

சனிக்கிழமை

திதி: திருதியை பின் இரவு 4.20 வரை.

நட்சத்திரம்: பரணி முற்பகல் 9.38 வரை.

கார்த்திகை விரதம்

சுபநேரம்: 3.02–4.32

[illegible]

(பகல்-இரவுக்குப் பழைய நேரப்படி)

ஊழலில் சிக்கினார்!

## தமது எம். பி. பதவியை இழப்பார் பெனாஸிர்?

### சுவிஸ் வங்கியில் 1.35 கோடி டொலர்

லண்டன், ஒக். 17

பாகிஸ்தான் முன்னாள் பிரதமரும் தற்போதைய எதிர்க்கட்சித் தலைவருமான பெனாஸிர்பூட்டோ, அவரின்



தாயார் நுஸ்ரத் பூட்டோ ஆகியோர் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகளை இழக்கும் நிலை ஏற்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

பெனாஸிரின் பெயரில் சுவிஸ் வங்கி கணக்கில் ஒரு கோடி 35 லட்சம் டொலர் நிதி இருப்பதாகத் தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டை அடுத்து பாகிஸ்தான் அதிகாரிகளின் கோரிக்கையின் பேரில் அந்தக் கணக்கை சுவிஸ் அதிகாரிகள் முடக்கி வைத்திருப்பதற்கான உத்தரவை நேற்று முன்தினம் விடுத்தார்கள்.

இதையடுத்து —

ஊழல் குற்றச்சாட்டின் பேரில் பெனாஸிரின் எம். பி. பதவியை ரத்துச் செய்வதற்கான ஆயத்தங்களில் பாகிஸ்தான் சபாநாயகரின் அலுவலகம் ஈடுபட்டிருப்பதாக நேற்றிரவு வெளியான செய்திகள் தெரிவித்தன.

பாகிஸ்தான் பிரதமரின் அலுவலகத்தின் கீழ் இயங்கும் ஊழல் தடுப்புப் பிரிவுடன் பாகிஸ்தான் சபாநாயகர் தொடர்பு கொண்டுள்ளதாக

(8 ஆம் பக்கம் பார்க்க)

# உதயன்

## புதிய குண்டு

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கென்று அரசாங்கம் தயாரித்துள்ள அதிகாரப் பரவலாக்கல் திட்டம் இதனை ஆராய்ந்து வரும் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவிடம் கடந்த திங்கட்கிழமை 13 ஆம் திகதி முழு வடிவில் சமர்ப்பிக்கப்பட்டுவிட்டது.

தமிழ் மக்கள் மத்தியில் பெரும் அதிருப்தியையும் எதிர்ப்பையும் தேடிக் கொண்டுள்ள வடக்கு – கிழக்குச் சம்பந்தமான அமைச்சரவையின் முடிவு அதில் சேர்க்கப்பட்டிருக்கிறது.

இப்போது இணைந்திருக்கும் வடக்கு, கிழக்கு மாகாணங்களைத் தொடர்ந்து அவ்வாறே இருக்க அனுமதிப்பதா அல்லது இரண்டாகப் பிரித்து விடுவதா என்பதனைத் தீர்மானிக்கும் பொறுப்பை மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களின் மக்களிடம் விடுவது என்பதே அதுவாகும். அதாவது குறிப்பிட்ட இரண்டு மாவட்டங்களிலும் சர்வஜன வாக்கெடுப்பு நடத்துவது என்ற முடிவு முன் வைக்கப்பட்டுள்ளது,

இதேவேளை, அரசாங்க நாடாளுமன்றக் குழு உறுப்பினர்கள் சிலர் புதிதாக ஒரு குண்டைப் போட்டிருக்கிறார்கள் வடக்கும் கிழக்கும் தொடர்ந்து இணைந்திருக்க வேண்டுமா என்பது குறித்துத் தீர்மானிக்க நாடளாவிய ரீதியில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்று அரசாங்க எம். பிக்கள் சிலர் வலியுறுத்தி உள்ளதாக அறியப்படுகிறது.

வடக்கு - கிழக்கு இணைந்திருப்பதை விரும்பாத பேரினவாத சக்திகளே தம்மைச் சார்ந்த அரச எம். பிக்கள் மூலம் இந்துப் புதிய குண்டைப் போட்டிருக்கிறார்கள் என்பதே பொருத்தமாகும். தமிழர்களின் தாயகம் பிரிக்கப்பட்டு விட வேண்டும் என்பதில் அக்கறையுள்ள பேரினவாதிகள் பின்னுக்கு மறைந்திருந்து குண்டின் திரிக்குத் தீ மூட்டுவதில் எவ்வித தடங்கலும் இருக்க மாட்டாது என நம்பலாம்.

சிங்கள ஆணைக்குழுவில் தொற்றிக் கொண்டிருந்த சிங்கள பௌத்த பேரினவாதிகள் அரச எம். பிக்கள் மத்தியில் ஊடுருவித் தமது செல்வாக்கை நிலை நிறுத்திக் கொண்டுள்ளனர் என்பது அப்பட்டமாகியுள்ளது

அரசாங்கம் என்ன செய்யப் போகிறது?

வடக்கு- கிழக்குப் பத்து வருடங்களாக இணைந்திருக்கிறது அந்த அடிப்படையிலேயே, அத்திவாரத்திலேயே இனப்பிரச்சினைக்கான தீர்வு கட்டி எழுதப்படவேண்டும் என்பது தமிழ் மக்களின் தீர்ந்த முடிவு. அதில் பேரம் பேசுவதற்குத் தமிழர்கள் இணங்கப் போவதில்லை தமிழ் அரசியற் கட்சிகள் சம்மதிக்கவும் கூடாது.

இத்தகைய நிலையில் வடக்கு கிழக்குக் குறித்த உத்தேச சர்வஜன வாக்கெடுப்பையே தமிழர்கள் எதிர்க்கிறார்கள். அவ்வாறிருக்க நாடளாவிய ரீதியில் சர்வஜன வாக்கு நடத்தப்பட வேண்டும் என்ற புதிய குண்டு, தீர்வு முயற்சியை அப்படியே பொசுக்கி விடும் ஆபத்து உருவாகி உள்ளது.

அதனால் அரசு முதலில் புதிய குண்டைத் தூக்கி எறிந்து செயலிழக்க வைக்கும் சக்தியைத் தேடிக்கொள்ள வேண்டிய தேவை வந்திருக்கிறது. அரசிடம் அத்தகைய வல்லமை உண்டா?

இன்றைய நிலை, 1957 ஆம் ஆண்டில் ஜனாதிபதி சந்திரிகாவின் தந்தை எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா எதிர்கொண்ட அதே நெருக்கடி நிலையை ஒத்திருக்கிறது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கோட்டைப் பகுதி பாதுகாப்புவலயம்

நேற்று முன்தினம் குண்டுவெடிப்பு இடம்பெற்ற கோட்டை கேந்திரப்பகுதி பாதுகாப்பு வலயமாக பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

அத்தியாவசிய தேவைதவிர்ந்த ஏனைய தேவைகளுக்கு அப்பகுதிக்குள் வர வேண்டாம் என்று மக்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

கோட்டைப் பகுதி தடை செய்யப்பட்டதால் நகரின் ஏனைய பகுதிகளில் நேற்று போக்குவரத்து நெரிச்சல் காணப்பட்டது. (உ-21-3)

# இலங்கையில் நிற்பதை குறைத்துக் கொள்க!

## பிரிட்டிஷ் பிரஜைகளுங்கு ஆலோசனை

கொழும்பு, ஒக். 17

இலங்கையில் தங்கியிருக்கும் காலத்தைக் குறைக்கும்படி கொழும்பில் உள்ள பிரிட்டிஷ் பிரஜைகளை பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சு கேட்டுள்ளது.

உல்லாசப் பயணம் மேற்கொண்டும், வியாபார நோக்கத்துடனும் இலங்கைக்குச் சென்றிருக்கும் பிரிட்டிஷ் பிரஜைகளிடமே இக்கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் நடைபெறும் குண்டுவெடிப்பு போன்ற சம்பவங்களை உதாசீனம் செய்ய முடியாது என்றும் அக்கோரிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் ஏழு பிரிட்டிஷ் காரர்கள் காயமடைந்திருந்தனர். (உ-21-3)

# மரண விசாரணையின்றி ஐந்து சடலங்களும்!

## பாதுகாப்பாக வைக்க உத்தரவு

கொழும்பு, ஒக்.17

கொழும்பு கோட்டையில் குண்டு வெடிப்பை நடத்தியவர்கள் எனக் கருதப்படும் ஐவரின் சடலங்களை மரண விசாரணை மேற்கொள்ளாது குளிரூட்டிய அறையில் பாதுகாப்பாக வைக்குமாறு கொழும்பு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

குண்டு வெடிப்பில் உயிரிழந்தவர்களின் மரண விசாரணை முடிவடையும் வரை இந்த உத்தரவு செல்லுபடியாகும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இச் சம்பவத்தில் உயிரிழந்த 18 பேரில் 11 பேரின் சடலங்கள் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன. (உ-21-3)

# சுற்றுலாத் துறையே பெரு வீழ்ச்சியுறும்!

கொழும்பு, ஒக். 17

"கொழும்பில் நடந்த குண்டு வெடிப்பால் ஏற்பட்ட நேரடி இழப்பிலும் பார்க்க எதிர்காலத்தில் ஏற்படப்போகும் தாக்கம் தான் முக்கியமானது" என்று சுற்றுலா, விமானத் துறை அமைச்சர் தர்மசிறி சேனநாயக்க தெரிவித்தார்.

இலங்கையில் உள்நாட்டுப் பிரச்சினை இன்னும் தீரவில்லை என்ற செய்தியை இத்தாக்குதல் சர்வதேச சமூகத்துக்கு விடுக்கிறது. இதனால் உல்லாசப் பயணத்துறைக்கு பெரு வீழ்ச்சி ஏற்படப்போகிறது — என்றார் அவர். (உ-21-3)

# 45 சடலங்களும் புலிகளிடம் ஒப்படைப்பு

வவுனியா, ஒக். 17

கடந்த திங்கட்கிழமை கனகராயன் குளத்துக்கு அப்பால் விடுதலைப்புலிகள் படையினர் மீது மேற்கொண்ட தாக்குதலின் போது உயிரிழந்த 45 விடுதலைப் புலிகளின் சடலங்கள் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுமூலம் புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டது.

நேற்று முன்தினம் வவுனியாவில் வைத்து படையினரிடமிருந்து பொறுப்பேற்ற இச் சடலங்களை மடுவில் வைத்து விடுதலைப் புலிகளிடம் செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு அதிகாரிகள் ஒப்படைத்தனர். (உ-3)


எமது புதிய வெளியீடுகள்!

★ ராஜ்குமார்..
திகில்
(திகிலூட்டும் பயங்கரப்படம்)

★ ஜெயராம்...
ரகுமான்
புதிய விசாரணை
ஒறிஜினல் வெளியீடு

★ விஜயகாந்தின்
பரதன்

வீடியோ விமல்
யாழ்ப்பாணம்.
(50603)



விக்னா
கல்வி நிறுவனம்
AL 99
பொருளியல்
திரு. விக்கி
நெகிழ்ச்சி
நாளை ஆரம்பம்
18 - 10 - 97
10 மணி
(50595)


# 'ரிமோட் கொன்ரோல்' கருவி மூலம் குண்டு வெடிக்க வைக்கப்பட்டதாம்

கொழும்பு, ஒக். 17

கொழும்பு கோட்டைப் பகுதியில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில்குண்டை 'ரிமோட் கொன்ரோல்' மூலமே தாக்குதல் நடத்தியோர் இயக்கியுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

கலதாரி ஹோட்டலுக்கு அரிசி விநியோகிக்கவென எடுத்துச் செல்வதாகக் கூறி லொறியை ஹோட்டல் வாகனத் தரிப்பு இடத்துக்கு ஓட்டிச் சென்ற ஒரு குழுவினர் லொறியை விட்டிறங்கிப் பின் நோக்கிச் சென்றனர் என்றும் —

பின்னர் 'ரிமோட் கொன்ரோல்' மூலம் குண்டைஇயக்கியுள்ளனர் எனத் தெரிய வருவதாகவும் — பொலீஸார் தெரிவித்தனர்.

இந்த முயற்சியை திசை திருப்புவதற்காக மற்றொரு குழு கொம்பனித்தெரு பக்கமாக இருந்து வந்து விகாரை, லேக்கவுஸ் பகுதிகளில் நின்று துப்பாக்கிப் பிரயோகம் மேற் கொண்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

குண்டு பொருத்தப்பட்ட லொறி காலை 7-05க்கு உள்ளே வந்ததாகவும்-

காலை 7-14க்கு குண்டு வெடித்ததாகவும்- தெரிவிக்கப்பட்டது.

குண்டுவெடித்தலொறியின் எஞ்சிய பாகங்களை இரசாயனப் பகுப்பாய்வாளர்கள் பரிசோதனை செய்வதாகவும் தெரிவிக்கப்பட்டது(உ 3-21)

## அமெரிக்க...

(முதலாம் பக்கத் தொடர்)

கான பயிற்சியும் 30 நாள் நடைபெறும்.

"ஒவ்வொரு குழுவிலும் 12 முதல் 20 வரையான பயிற்சியாளர்கள் இடம்பெறுவர்.

"கடந்த மார்ச் மாதம் முதல் இடம் பெறும் இப் பயிற்சி திட்டத்தின் பிரகாரம் இதுவரை 4 தொகுதியினருக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுளது.

"ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் இந்தப் பயிற்சியை முடிக்க திட்டமிடப்பட்டிருந்தது ஆனால் அதுபிற்போடப்பட்டு தற்போது நடைபெறுகிறது.

"அமெரிக்க பயிற்சி உதவித் திட்டத்தின் கீழ் இந்தப் பயிற்சி தொடர்பான உடன்பாடு பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தவுடன் செய்யப்பட்டிருந்தது" —

இப்படி அவர் மேலும் தெரிவித்தார். (உ-21-3)

## குண்டுத்...

(முதலாம் பக்கத் தொடர்)

பினர் என்றும் —

இவர் உளவு நடவடிக்கையில் பயிற்றப்பட்டவர் என்றும்— தெரிவிக்கப்பட்டது.

கொழும்பில் புலிகளின் நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் குயிலன் என்பவரின் சடலமே மற்றையது என்று அடையாளம் காணப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இத்தாக்குதலில் ஈடுபட்டு தப்பியதாகக் கருதப்படும் ஏனைய ஐவரும் மேலும் புதிய தாக்குதல்களை கொழும்பிலும் அதன் சுற்று வட்டாரத்திலும் நடத்தலாம் என்பதால், பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

வீதிகள் எங்கும் தடை போட்டு படையினர் தீவிர தேடுதலை மேற்கொண்டுள்ளனர்.

ஏராளமான படையினர் நகரில் குவிக்கப்பட்டுள்ளனர்.

இந்தக்குண்டு வெடித்த பகுதியில் இருந்து ரி 56 ரக துப்பாக்கிகள் நான்கையும், ரி 81 ரகத் துப்பாக்கி ஒன்றையும் படையினர் கைப்பற்றியதாக அறிவிக்கப்படுகிறது.

மூன்று ஆர். பி. ஜி, ஒரு வானொலிப்பெட்டி, ஒரு 40 மி. மி குண்டு ஏவு கருவி ஆகியன உட்பட மற்றும் பல இராணுவ உபகரணங்களையும் கைப்பற்றியதாகப் படைத் தரப்பு தெரிவித்தது. (உ-3-5-21)

## தமது எம்.பி...

(ஏழாம் பக்கத் தொடர்)

வும் —

தமக்கு இந்த நிதி கிடைத்ததற்கான சட்ட ரீதியான ஆராய்வுகளைக் காட்டுவதற்கு பெனாஸிரும், அவரது தாயாரும் தவறினால், ஊழல் குற்றச்சாட்டுகளின் கீழ் இருவரும் தமது எம். பிப் பதவிகளை இழக்க நேரிடும் என்றும் — ஊழல் தடுப்புப் பிரிவின் தலைவர் அப்துல் ரஹ்மான் தெரிவித்தார். (உ)

# 'லங்கா பெல்' தலைவரும் குண்டு வெடிப்பில் காயம்

கொழும்பு, ஒக். 17

கொழும்பில் நடந்த குண்டு வெடிப்பில் காயமடைந்த 35 வெளிநாட்டவர்களில் லங்காபெல் தொலைத்தொடர்பு நிறுவனத் தலைவர் ஸ்ரீபன் பெக்கரும் ஒருவர் எனத் தெரிவிக்கப்பட்டது.

கலதாரி ஹோட்டலில் தங்கியிருந்த இவருக்கு ஏற்பட்ட காயங்களுக்கு 30 தையல்கள் போடப்பட்டதாகவும் —

அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் இவர் சிகிச்சை பெறுவதாகவும் — தெரிவிக்கப்படுகிறது. (உ-21-3)

# அமைச்சரவை ஆராய்வு

கொழும்பு, ஒக். 17

எந்தவொரு திடீர் தாக்குதல்களுக்கும் முகம் கொடுக்கக் கூடிய வகையில் அரச நிறுவனங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும் என்று அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற குண்டு வெடிப்பையடுத்து எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில் அமைச்சரவை நேற்று விசேடமாகக் கூடியது. சகல அமைச்சர்களும் பங்கு பற்றினர்.

குண்டு வெடிப்புக்கு அதிர்ச்சி வெளியிடப்பட்டதுடன் நகரின் பாதுகாப்பு குறித்து ஆராயப்பட்டது.

ஒவ்வொரு அமைச்சிலும் அமைச்சரின் மேற்பார்வையில் பாதுகாப்பு திட்டம் செயல்பட வேண்டும் என்று அமைச்சரவையில் முடிவு செய்யப்பட்டது. (உ-21-3)

# மேலும் தாக்குதல் நடக்கலாம் மக்களுக்கு அரசு எச்சரிக்கை

கொழும்பு, ஒக். 17

நேற்று முன்தினம் இடம்பெற்ற குண்டு வெடிப்பை தொடர்ந்து மேலும் தாக்குதல் சம்பவங்கள் இடம்பெறலாம் என்று அரசாங்கம் மக்களை எச்சரித்துள்ளது,

அரசாங்கம் நேற்று விடுத்த செய்தியிலேயே இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நகரின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

குண்டு வெடிப்புச் சம்பவத்தையடுத்து தப்பியவர்களைத் தேடி பலத்த தேடுதலும் நடத்தப்படுகிறது.

வீதிகளில் தடைகள் போடப்பட்டு ஏராளமான படையினர் கொழும்பு எங்கும் குவிக்கப்பட்டுள்ளனர்.

பொலீஸாரின் வாகன ரோந்தும் அதிகரிக்கப்பட்டுள்ளது. (21-3)

### அறவழி போராட்டக்குழு ஏற்பாட்டில்

# சுயதொழில் வாய்ப்புக்கு பயிற்சி அளிக்க நிலையம்

நெல்லியடி, ஒக். 17

வேலையற்றிருக்கும் இளைஞர், யுவதிகளுக்கு சுயதொழில் வாய்ப்பை உருவாக்கும் நோக்கில் அறவழிப் போராட்டக் குழு தென்மராட்சியில் 'பயிலகம்' பயிற்சி நிலையத்தை எதிர்வரும் 20 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு திறந்து வைக்கவுள்ளது

அறவழிப்போராட்டக்குழு தலைவர் வி. ஜி. தங்கவேல் தலைமையில் நடைபெறும் இவ்வைபவத்தில், தென்மராட்சிப் பிரதேச செயலர் திரு. பு. சுந்தரம்பிள்ளை பயிற்சி நிலயத்தை திறந்து வைப்பார்.

சுமார் பத்துக்கும் மேற்பட்ட திட்டங்களை நடைமுறைப்படுத்தும் இந்நிலையத்தில் பயிற்சி பெற இதுவரை சுமார் நூற்றுக்கு மேற்பட்ட இளைஞர், யுவதிகள் விண்ணப்பித்ததாகவும் முன்னுரிமை அடிப்படையில் சுயதொழில் வாய்ப்பு வழங்கப்படும் இவர்களுக்கு மாதாந்த ஊக்குவிப்புப் பணத்தைத் தேசிய பயிலுநர் சபையின் அனுசரணையில் வழங்கப்படுமெனவும் இதன் தலைவர் வி. ஜி. தங்கவேல் தெரிவித்தார். (உ-109)

## அதிகாரிகள் மட்டுமே வந்தனர்

கொழும்பு, ஒக். 17

நேற்று முன்தினம் இடம்பெற்ற குண்டு வெடிப்பால் சேதமடைந்த கோட்டைப் பகுதியில் அரச அலுவலகங்களுக்கு நேற்று உயர் அதிகாரிகள்மட்டும் வந்திருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இலங்கை வங்கி கட்டடம் உட்பட மற்றும் கட்டடங்களுக்கு ஏற்பட்ட சேதங்களை துப்புரவாக்கும் பணி அடுத்த வாரம் ஆரம்பிக்கும் என்று தெரிவிக்கப்பட்டது.

பெரும் சேதம் அடைந்த கலதாரி, ஹில்டன் ஹோட்டல்களில் தங்கியிருந்த வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் நீர் கொழும்பு பகுதி ஹோட்டல்களுக்கு மாற்றப்பட்டுள்ளனர். (உ-21-3)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 17 - 10 - 97 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org